பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | பங்குனி 09 வெள்ளிக்கிழமை 23.03.2018 | கதிர் 138

## ஐ.நா. ஆணையரின் அறிக்கையை வரவேற்கும் மாவை

கொழும்பு, மார்ச் 23

இலங்கை அரசு ஐ.நாவுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவது தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை வரவேற்பதாகத்

பக்கம் 03 ≫

# ஈ.பி.டி.பி. தரப்பின் ஆதரவை கோருகின்றது கூட்டமைப்பு

## டக்ளஸை நேரில் சந்தித்து ரெலோவினர் வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 23

வடக்கு, கிழக்கில் தொங்குநிலை ஏற்பட்டுள்ள பல டசின் உள்ளூராட்சிச் சபைகளில் ஸ்திரமான ஆட்சி அமைப்பதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவைக் கோரியிருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இது தொடர்பாகக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுள் ஒன்றான ரெலோவின் மூத்த பிரதிநிதிகள் நேற்று முன்தினம் பிற்பகலில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்தியிருக்கின்றார்கள்.

பக்கம் 18 ≫

## காணாமற்போனோரின் உறவினர்களை யாழில் சந்தித்தாராம் மைத்திரி

### நான்கு தினங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை



கொழும்பு, மார் ச்23

யாழ்ப்பாணத்துக்குக் கடந்த திங்கட்கிழமை வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, காணாமற்போனோரின் உறவினர்களைச் சந்தித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பக்கம் 18 ≫

### ரணிலுக்கு எதிரான தீர்மானம்

## யாரையும் பகைக்காத வகையில் முடிவெடுக்குமாம் கூட்டமைப்பு!

### சொல்கிறார் சம்பந்தன்



கொழும்பு, மார்ச் 23

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவைக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு கூடி விரைவில் எடுக்கும். இந்த விடயத்தில் நாம் யாரையும் பகைக்கத் தேவையில்லை. எங்கள் இலக்கிற்கான பயணத்திற்கு இடையூறு ஏற்படாதவகையில் எமது தீர்மானத்தை நாம் மேற்கொள்வோம்."

– இவ்வாறு

பக்கம் 03 ≫

## கண்டியில் படை குறைப்பு

கொழும்பு, மார்ச் 23

கண்டி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பதற்ற நிலைமையை கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரக் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட படையினரின் எண்ணிக்கை தற்போது

பக்கம் 18 ≫

## "உங்கட அப்பாவுக்கு சொல்லுங்கோ எங்கட அப்பாவை விடச் சொல்லி!"

### ஆனந்தசுதாகரனின் மகள் மைத்திரியின் மகளுக்கு உருக்கக் கடிதம்



கிளிநொச்சி, மார்ச் 23

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரின் மகள் சங்கீதா, தனது தந்தையை மன்னித்து விடுதலை செய்யுமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகளான சத்துரிக்

பக்கம் 03 ≫



## ரணில் மீதான பிரேரணை ஏப். 4 ஆம் திகதி விவாதம்

கொழும்பு, மார்ச் 23

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான நாடாளுமன்ற விவாதத்தை எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி

பக்கம் 18 ≫

### அரியாலை கொலை:

## புலனாய்வாளர்கள் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

மணியந்தோட்டம் பகுதியில் இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கடந்த 5 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விஷேட அதிரடிப்

பக்கம் 03 ≫

## தேர்தலில் பின்னடைவுக்கு காரணம் தமிழரசுக் கட்சியே

### மாவைக்குச் சிவாஜி பதிலடி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 23

"உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு முதலமைச்சருக்கு எதிராகத் தமிழரசுக் கட்சி கொண்டு வந்த நம்பிக்

பக்கம் 18 ≫

### சங்கானைக் குருக்கள் கொலை:

## ராணுவச் சிப்பாய் உட்பட மூவருக்கு நேற்று தூக்கு!

### நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 23

சங்கானையில் ஆலயக் குருக்களைத் துப்பாக்கிச் சூட்டில் கொலை செய்து அவரது பிள்ளைகளைக் காயப்படுத்திவிட்டு ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றைக் கொள்ளையடித்

பக்கம் 18 ≫

## கூட்டமைப்புக்கு ஆதரவளிக்காதீர்

### சங்கரி கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளிக்கவேண்டாம் எனக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கை ஒன்றை வெளி

பக்கம் 03 ≫

### இனி இது ரகசியம் அல்ல!

மாலை வேளை அந்தக் கல்விமான் விடுவிடு என எனது மேசைக்கு முன்னால் வந்து கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்தார்.

"உம்மை இன்று குழப்பப் போகிறேன்." – என்ற பீடியுடன் தனது குசும்பை ஆரம்பித்தார். பக்கம் 03 ≫

காலைக்கதிர்
Kalaikkathir



# பொறுப்புக்கூறல் குறித்த வாக்குறுதியை இலங்கை நிறைவேற்றுவது சந்தேகமே!



## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கவலை

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை உருவாக்கும் விடயத்தில் மெதுவான முன்னேற்றங்களே இடம் பெறுகின்றமை குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட்ராட் அல்ஹுசேன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பாக 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, 2017ஆம் ஆண்டு மீள உறுதிப்படுத்தப்பட்ட 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப்படுவதில் உள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நேற்றுமுன்தினம் சமர்ப்பித்த எழுத்து மூல, இடைக்கால அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் இந்த அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் துணை ஆணையாளர் கேட் கில்மோர் நேற்றுமுன்தினம் கவுன்ஸிலில் சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன், ஆக்கபூர்வமான தொடர்புகளை இலங்கை அரசு பேணி வருவது மற்றும் கவுன்ஸிலின் சிறப்பு அறிக்கையாளர்களின் பயணங்களுக்கான ஒத்துழைப்புகளை வழங்குவது உள்ளிட்ட, மனித உரிமைகள் பொறி முறைகளுடன் இணங்கிச் செயற்படுவதை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் வரவேற்கிறது.

சித்திரவதைகளுக்கு எதிரான பிரகடனத்துடன் இணைந்து கொள்ளும், இலங்கையின் முடிவையும், தேசிய மனித உரிமைகள் செயற்திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளதையும் நாம் வரவேற்கிறோம்.

எனினும், இலங்கையில் நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை உருவாக்கும் விடயத்தில் மெதுவான முன்னேற்றங்களே நிகழ்ந்திருக்கின்றமை குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் அதிக கவலையைக் கொண்டுள்ளது.

எந்த சட்ட வரைவுகளும் பகிரங்கப்படுத்தப்படாத நிலையிலும், அதற்கான உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையிலும், நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகள் தொடர்பாக, எதிர்வரும் 2019 மார்ச் மாதத்துக்குள் 30/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவது சந்தேகமே.

காணாமற்போனோர் பணியக சட்டம் இயற்றப்பட்டு, 20 மாதங்கள் கழித்து, அண்மையிலேயே அதற்கான ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுவும் எமக்கு வருத்தம் அளிக்கிறது.

மேலும், இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீளளிப்பதிலும், போதுமான முன்னேற்றம் இல்லை.

இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்ந்தாலோ, பாதுகாப்புக் காரணங்களுக்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு நியாயமான இழப்பீடுகளை வழங்குவதற்கான, சுதந்திரமான பொறி முறைகளை அமைக்காவிட்டாலோ, நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப முடியாது.

சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களுக்கு தண்டனை வழங்கும் திறனை நிரூபிக்கவோ அல்லது அதற்கான விருப்பத்தையோ அதிகாரிகள் இன்னமும் வெளிப்படுத்தவில்லை.

இது, மோசமான குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்கான, சிறப்பு நீதிமன்றத்தை சர்வதேச நிபுணர்களின் ஆதரவுடன் நிறுவ வேண்டும் என்ற வாதத்தைப் பலப்படுத்துகிறது.

அத்தகையதொரு பொறிமுறை இல்லாத நிலையில், நாம், உலகளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

கடந்த ஆண்டில் மதங்களுக்கிடையிலான வன்முறைச் சம்பவங்கள், தாக்குதல்கள், மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான இன வெறுப்பு கருத்துக்கள் வெளியிடப்பட்டமை தீவிரமான கரிசனையை ஏற்படுத்தியுள்ளது.

சித்திரவதைகள் தொடர்வதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் துன்புறுத்தப்படுகின்றனர் எனவும் கண்காணிக்கப்படுகின்றனர் எனவும்வரும் அறிக்கைகள் என்பன அதிகம் கவலையை ஏற்படுத்துகின்றன.

இலங்கை மக்களின் மனித உரிமைகள் விடயத்தில் குறிப்பாக, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தொடர்ந்தும், கவனம் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய

# இரண்டு இளைஞர்கள் வவுனியாவில் கைது!

வவுனியா, மார்ச் 23

வவுனியாவில் இடம் பெற்ற பல்வேறு நூதன திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு இளைஞர்களை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

வவுனியா நீதிமன்றம் , வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை , மாவட்ட நீதிவான் நீதிமன்றம் , பாடசாலைகள் முன்பாக தரித்து நிற்கும் மோட்டார் சைக்கிள்களின் டிக்கியை (பொருள்கள் வைக்கும் பெட்டகம்) வேறொரு சாவி மூலம் திறந்து தொலைபேசிகள், பணம் என்பவை திருடப்பட்டு வருகின்றன என வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம் வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தமிந்த சோமஜீத் தலைமையில் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுபசிங்கவின் வழிகாட்டலில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது வவுனியா நகரில் வைத்து சாந்தசோலை, அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இரு சந்தேகநபர்களை கைது செய்தமையுடன் இவர்களிடமிருந்து 15 கையடக்கத் தொலைபேசிகளும், 30 ஆயிரம் ரூபா பணமும், தேசிய அடையாள அட்டைகள், திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளோம் என பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக 8 மோட்டார் சைக்கிள்களிலிருந்தும், மாவட்ட நீதிமன்றம் முன்பாக 6 மோட்டார் சைக்கிள்களிலிருந்தும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக தரித்துநின்ற 3 மோட்டார் சைக்கிள்களிலிருந்தும் வவுனியா சைவப்பிரகாச பாடசாலைக்கு முன்பாக தரித்து நின்ற ஒரு மோட்டார் சைக்கிளிலிருந்தும் திருடப்பட்டுள்ளன என விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இவர்கள் கட்டாரில் இருந்து சில வாரங்களுக்கு முன்னரே வவுனியாவிற்கு வந்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் இவ்வாறு திருட்டுச் சம்பவம் ஏதேனும் இடம்பெற்றிருந்தால் உடனடியாக முறைப்பாட்டை மேற்கொள்ளுமாறும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (க-100)

# கிளிநொச்சியில் சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் மக்கள் முன் உறுதியுரைத்து சத்தியப்பிரமாணம்





முல்லைத்தீவு, மார்ச் 23

சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் சார்பில் சுயேச்சைக் குழுவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் பொது மக்கள் முன்னிலையில் உறுதியுரைத்து சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி, பருத்தித்துறை நகரசபை உறுப்பினர்களே இவ்வாறு உறுதியுரைத்து சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

இவர்கள் தங்களது உறுதியுரையில் தெரிவித்தவை வருமாறு:-

சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் உறுப்பினராகிய நான் உள்ளூராட்சி சபையின் மக்கள் பிரதிநிதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்டமைக்கு அமைய மக்களுக்கு மதிப்பளித்து, உண்மையாகவும் நேர்மையாகவும் விசுவாசமாகவும் வெளிப்படையாகவும் மக்களின் தேவைகளையும் நலனையும் மக்கள் விருப்பத்தையும் நிறைவேற்றி, சமூக வளர்ச்சியையும் பிரதேச அபிவிருத்தியையும் உருவாக்குவற்கு என்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்படுவேன்.

மக்களுக்கும் சமூக வளர்ச்சிக்கும் தேசத்தின் விடுதலைக்கும் எதிரான முறையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் செயற்படமாட்டேன் எனவும் மக்களாகிய தங்களின் முன்னிலையில் உறுதியுரைத்துச் சத்தியம் செய்கிறேன் எனத் தெரிவித்துள்ளனர். இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தாபகர் மு.சந்திரகுமார், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர். (க-70)

*(அங்கு இடம்பெற்ற உரை 4 ஆம் பக்கத்தில்)*

# வவுனியா புதிய பஸ் நிலையத்தில் புகைப்போரால் பயணிகள் அசௌகரியம்

வவுனியா, புதிய பஸ் நிலையத்தில் புகைப்பிடிப்பவர்களால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் உள்ள உண வகத்தில் சிகரட் உள்ளிட்ட புகைத்தல் பொருள்களைப் பெற்றுக் கொள்பவர்கள் அதனை அந்த பஸ் நிலையப் பகுதியில் உள்ள பொதுவெளியில் வைத்து பயன்படுத்துவதால் அங்கு வந்து செல்லும் சிறுவர்கள், பெண்கள் மற்றும் பெரியவர்கள் எனப் பலரும் அதன் புகையை சுவாசிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால், பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் இந்தப் பஸ் நிலையத்திற்குள் புகைத்தல் பொருள்களை விற்பனை செய்யவும் தடை விதிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-100)

# லயன்ஸ் நிகழ்வு ஒத்திவைப்பு

நல்லூர் லயன்ஸ் கழகத்தினால் தெல்லிப்பழை, புற்றுநோய் வைத்தியசாலையில் நோயாளிகளுடன் உதவிக்காக தங்குவோருக்கான கட்டடம் ஒன்றை அவ்வளாகத்தில் அமைக்கும் பொருட்டு நிதி சேகரிக்கும் முகமாக நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, நீராவியடியில் நடைபெறவிருந்த இசை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் 29.04.2018 ஞாயிற்றுக்கிழமை, 4.30 மணிக்குப் பிற்போடப் பட்டுள்ளது என நல்லூர் லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது.

# வேலை தேடுவோருக்கு நூல் இன்று வெளியீடு

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் மற்றும் அரச வேலை தேடும் இளைஞர், யுவதிகளுக்கான வழிகாட்டல் நூல் இன்று மாலை 5.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் ஆகியோரால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த நூலை உருவாக்கியுள்ள ஈ.ஆர்.பிரணவா மற்றும் ஏ.கொன்சன் சேவியர் என்ற இரு தமிழ் இளைஞர்கள் இணைந்து இந்த நூல் குறித்து நேற்றுக் காலை யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர்.

இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

க.பொ.த. சாதாரண தரம் மற்றும். க.பொத.உயர் தரம் நிறைவு செய்த பின்னர் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்கள் அடுத்த கட்டம் என்ன செய்வது எனத் தெரியாத நிலையில் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கிறார்கள். இதனால் பல மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் நிலையும் உள்ளது.

இதேபோல் தமிழ் இளைஞர், யுவதிகளும் சரி சிங்கள இளைஞர், யுவதிகளும் சரி அரச வேலை வாய்ப்பைப் பெறுவதற்குப் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். இவர்களை மையப்படுத்தி அதாவது இவர்களுடைய தேவைகளை கருத்தில் கொண்டுத ஹைட் என்ற பெயரில் ஒன்றரை வருடம் உழைப்பின் மூலமாக இந்த நூலை உருவாக்கியிருக்கின்றோம்.

இந்த நூல் ஊடாக பாடசாலை கல்வியை நிறைவு செய்துள்ள மாணவர்கள், அரச வேலை தேடும் இளைஞர் யுவதிகள் அதிகம் நன்மையடைவார்கள் – என்றனர். (ஐ–7)

## கூட்டமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கூட்டமைப்புக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கத் தயார் என்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குத் தெரிவான தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவரின் சத்தியப்பிரமாண நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரட்ணம் தெரிவித்ததாக ஊடகங்களில் செய்தி வெளியானது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

என்ன நோக்கத்துக்காக உதய சூரியன் சின்னத்தில் ஓரணியாக நாம் இணைந்து தேர்தலில் போட்டியிட்டோமோ அதன் நோக்கத்துக்கு எதிராக, அதுவும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் உப தலைவர் இவ்வாறு குறிப்பிடுவது, அவர் கிழக்கு மாகாணத்தில் யாருக்கோ விலைபோய்விட்டார் என்பதையே கோடிட்டுக் காட்டுகின்றது. அல்லது அவர் எதிர்காலத்தில் தனக்கு ஒரு பதவியைப் பெறுவதற்காக பிரதேசசபை உறுப்பினர்களைப் பகடைக் காய்களாக பயன்படுத்துகின்றார் என எண்ணத் தோன்றுகின்றது.

தேர்தலுக்கு முன்பு இதனை அவர் கூறியிருந்தால் மக்களின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதையும் ஒரு கணம் சிந்தித்து பார்க்கவேண்டும். தேர்தல் காலத்தில் ஓர் அறிக்கையும், தேர்தல் முடிந்த பின்னர் வேறு ஓர் அறிக்கையும் விடுத்து மக்களை வஞ்சித்து, ஏமாற்றுவது அவருக்கு வேண்டுமானால் கைவந்த கலையாக இருக்கலாம். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அது பொருந்தாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் தெரிவான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழரசுக் கட்சியை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம். மீறினால் அவர்கள் மீது கட்சி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதனையும் வலியுறுத்துகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*“ஹ்ஹா...!”* என்ற வழமையான அவரது சிரிப்புடனும் உரிமையுடனும் உரையாடல் ஆரம்பமானது.

*“என்ன நடக்கப் போகின்றது உள்ளூராட்சி சபைகளுக்கு? யார் ஆட்சி அமைக்கப் போகினம்?”* – என்று எனக்கு அவர் கொக்கி போட்டார். நானா சிக்குவேன்...?

*“எனக்கு என்ன ஸேர் தெரியும்? நீங்கள்தான் சொல்ல வேண்டும்?”* என்று வலு பக்குவமாகப் பதிலளித்தேன் நான்.

*‘‘நீர்... மார்ட்டின் றோட் ஒபீஸ் பக்கம் போயிருக்கின்றீரா?”* – என்று சடாரென ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

*“கடைசியாக ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் போயிருக்கிறேன்...!”* – என்றேன்.

*“அப்ப கவனியாதோர் பட்டியலிலை நீர் இருக்கிறது சரிதான் காணும்”* – என்று தமது வாய்க்குள் முணுமுணுத்த அவர் தொடர்ந்தார்.

*“அந்த அலுவலகத்தின்ரை முன் முற்றத்தைப் பாரும். அந்த அலுவலக மலசலக் கூடப் பக்கம் எப்பவாவது போயிருக்கின்றீரா? ஒரு தடவை போய்ப் பாரும். மூக்கைப் பொத்திக் கொண்டுதான் போக வேணும். அங்கு வருகின்ற மகளிர் கூட அந்த மலசலகூடத்தைத்தான் பாவிக்க வேணும் எண்டது பெரும்தலைவிதி பாரும். ஓர் அலுவலகத்தையும் அதன் கக்கூஸையும் கூட சுத்தமாக வைச்சிருக்கத் தெரியாதவை, யாழ். மாநகரசபை நிர்வாகத்தை எடுத்து நகரத்தைச் சுத்தமாக வைக்கப் போகினமாம்...!”* – என்று சீறினார்.

*‘‘என்ன ஸேர்... ஸேம் சைட் கோலோ?”* – என்று கேட்டேன்.

அதற்குத் தமது வழமையான *‘ஹ்ஹஹ்ஹா...!’* என்ற சிரிப்பைப் பதிலாகத் தந்தார்.

பிறகு ஸீரியஸான ஒரு விடயத்துக்குள் இறங்கினார்.

*“புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் – அமிர்தலிங்கத்தை சுட முன்னரும், பின்னரும் – அவரை, அவரது அரசியல் செயல்போக்கை கடுமையாக விமர்சித்து, சீர்கெடுத்துத்தான் பேசிக் கொண்டிருந்தவர்கள். அந்தச் சமயத்திலை யாழ்ப்பாணத்திலை இருந்தபடி, இல்லை எண்டு புலிகளோடையும் மோதியபடி, அமிர்தலிங்கத்தின்ரை சிறப்பை ‘ஒப்பினா’, ‘பப்ளிக்கா’ பேசிக் கொண்டு திரிஞ்சவர் பேராசிரியர் சிற்றம்பலம் ஒருவர்தான். அப்ப அவர் யுனிவர்சிற்றியிலையும் இருந்தவர். இதாலை புலிகளின்ரை சில, பல விசாரணைகளையும் எதிர்கொண்டவர். அவ்வளவு அமிர்தலிங்கத்தின்ரை தீவிர விசுவாசி. இப்பையும் – இதுவரையும் – தமிழரசுக்கட்சியின்ரை சிரேஷ்ட உபதலைவர் அவர்தான். ஆனால் அமிர்தலிங்கத்தின்ரை சிலை திறப்பு விழாவுக்கு அவருக்கு அழைப்பிதழ் கூட அனுப்பவில்லையாம் பாரும்.”* – என்றார் அவர்.

*“சீ... அப்படி இருக்காது.... எங்கடை பத்திரிகைக்கும் அழைப்பு வரல்லேத்தான்... ஆனால் கடைசி நேரத்திலை – அன்று காலையிலை – எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகச் செயலாளர் எங்களையும் வரச்சொல்லி மொபைலிலை ஒரு ‘எஸ்.எம்.எஸ்.’ அனுப்பினவர். அதாவது வந்ததே எண்டு சந்தோஷப்பட்டோம்... ஆனால் உவர் பேராசிரியருக்குக் கட்டாயம் அனுப்பியிருப்பினம்... நீங்கள் அபாண்டமாய்க் குற்றம் சொல்லாதீர்கள்...!”* – என்றேன் நான்.

*“நான் ஏன் உமக்குப் பொய் சொல்லுறன்...? வழியிலை பேராசிரியர் சிற்றம்பலத்தைக் கண்டு பேசினான்... அவர்தான் உந்தத் தகவலைக் கவலையோட சொன்னவர்.... வலிமேற்குப் பிரதேச சபைத் தலைவராக நாகநந்தினி ஐங்கரன் இருந்த காலத்திலை இந்தச் சிலை வைக்கிற திட்டத்துக்கு முதலிலை ஆலோசனை கொடுத்ததே தான்தான் எண்டும் பேராசிரியர் சொன்னவர்.... அந்த நேரத்திலை உங்களோடை நிண்டு அமிர்தலிங்கத்துக்கு ஆப்படிச்சவையள் எல்லாம் இப்ப அமிர்தலிங்கத்துக்கு சிலை திறக்கினம். ... அப்ப அமிர்தலிங்கத்தோடை நிண்ட பேராசிரியர் சிற்றம்பலம் எல்லாம் வெளியிலை... உதுதான் பாரும் அரசியல்”* என்றார் அவர்.

*“ஏன் ஸேர் எங்களை உதுக்கு வம்புக்கு இழுக்கின்றீர்கள்?”* – என்று நான் கேட்டேன்.

*“நீங்களும் சேர்ந்துதானே அப்ப புலிகள் செய்தவை எல்லாவற்றையும் நியாயப்படுத்தினீங்கள்... அமிர்தலிங்கத்தின்ரை பக்கத்தை நியாயப்படுத்தி ஏதேனும் எழுதினனீங்களோ...? இல்லையே...? இப்ப... தமிழரசிலை கலந்ததோடை அமிர்தலிங்கத்தின்ரை பெரிய தொண்டர்கள் மாதிரி நடிக்கின்றீர்கள்...!”* – என்று பொரிந்து தள்ளினார் அவர்.

*எனக்குப் பதில் சொல்ல எதுவும் இருக்கவில்லை. மெல்ல மேசையைவிட்டு எழும்பி, அவரையும் கூட்டியவாறு அலுவலகத்துக்கு வெளியே வந்து அவரை அவரது ஸ்கூட்டரில் ஏற்றி அனுப்பி வைத்தேன்.*

*‘மனுசன் ஸேம்சைட் கோல் அடிச்சாலும் குறி வைச்சு அடிக்கின்றது.’* – என்று மனதுக்குள் உருப் போட்டுக் கொண்டேன் நான். **-மின்னல்-**

## யாரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

‘காலைக்கதிர்’ நாளிதழுக்கு நேற்றிரவு கருத்து வெளியிட்டார் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

பிரதமருக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சந்தித்துப் பேசினார்.

அந்தப் பேச்சுக் குறித்தும், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரம் குறித்தும் சம்பந்தனிடம் கேட்டோம்.

“இது வழமையான சந்திப்பு. பல விடயங்கள் குறித்து நாங்கள் தொடர்ந்து பேசி வருகின்றோம் தானே...! அவற்றின் தொடர்தான் இந்தச் சந்திப்பும்.

‘‘புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றமை உங்களுக்குத் தெரியும்.

“நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளினால் சில, பல குழப்பங்கள், பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றமை உண்மைதான்.

“எது, எப்படியென்றாலும் நாம் எமது குறிக்கோளை – இலக்கை – அடைய வேண்டும். அப்படி அடைவதற்கு உசிதமான வழி எது என்று நாம் ஆராய்கிறோம். அதனடிப்படையில் நியாயமான முடிவு ஒன்றை நாம் எடுப்போம்.

“இந்த விடயத்தில் நாம் யாருடனும் பகைத்துக் கொள்ளத் தேவையில்லை. எல்லோருடைய ஒத்துழைப்பும் எமக்கு அவசியம். அதற்கேற்ற வகையில் ஒரு முடிவை எடுப்போம்.

“எமது பயணத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் – எமது பயணத்துக்கு பலம் சேர்க்கும் விதத்தில் – ஒரு தீர்க்கமான முடிவை எமது நாடாளுமன்றக் குழு கூடி விரைவில் முடிவு செய்யும்.” – என்றார் சம்பந்தன். (உ)

## புலனாய்வாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவரையும் நிபந்தனையுடனான பிணையில் விடுவித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று கட்டளை வழங்கியது.

2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22ஆம் திகதி அரியாலை கிழக்கு மணியம்தோட்டம் வசந்தபுரம் முதலாம் குறுக்கு வீதிப் பகுதியில் 24 வயதுடைய டொன் பொஸ்கோ டினேசன் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இளைஞர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணத் தலைமையகப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுப் பின்னர் பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் கொழும்புக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடந்த நவம்பர் மாதம் 3ஆம் திகதி யாழ்ப்பாணம் சிறப்பு அதிரடிப் படை முகாமில் கடமையாற்றிய மல்லவ ஆராய்ச் சிகே பிரதீப் நிசாந்த மற்றும் ரத் நாயக்க முதியான்சலாகே இந்திக புஸ்பகுமார ஆகிய சிறப்பு அதிரடிப் படையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் அன்றிலிருந்து சுமார் 5 மாதங்களாக யாழ்ப்பாணம் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் சார்பில் சட்டத்தரணி மோகனதாஸ் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்தார்.

அதன் மீதான கட்டளை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனால் நேற்று வழங்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் 50 ஆயிரம் ரூபா பணத்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வைப்பிலிடவேண்டும். சந்தேகநபர்கள் இருவருக்கும் தலா 5 லட்சம் பெறுதியிடைய 2 ஆள் பிணையாளிகள் கையொப்பமிட வேண்டும். ஆள்பிணையாளிகள் நீதிவானால் அனுமதிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும். சந்தேகநபர்கள் இருவரும் ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் கையொப்பமிடவேண்டும். வெளிநாடு செல்லத் தடை ஆகிய நிபந்தனைகளின் கீழ் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி பிணை வழங்கிக் கட்டளை வழங்கினார். (ஐ)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆணையாளர் சையிட்ராட் அல்ஹுசைனினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை குறித்துக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பான அரசின் செயற்பாடுகள் தமக்குப் பெரும் ஏமாற்றங்களையே தந்துள்ளதாகத் தெரிவித்த அவர், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு எடுத்துள்ள வலிமையான மற்றும் பலமான தீர்மானத்தை வரவேற்பதாகக் குறிப்பிட்டார். (ஐ)

## உங்கட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவுக்கு உருக்கமான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி அன்று சுகவீனம் காரணமாக மரணமடைந்த தனது மனைவியின் இறுதி நிகழ்வுக்குச் சிறைவிடுப்பில் வருகை தந்த ஆனந்தசுதாகர் அங்கு அஞ்சலி செலுத்திய பின்னர் மீண்டும் சிறைச்சாலை பஸ்ஸில் ஏறி மகஸின் சிறைச்சாலைக்குச் செல்ல ஆயத்தமானார். அப்போது அவரது பத்து வயது மகளான சங்கீதாவும் சிறைச் சாலை பஸ்ஸில் தந்தையுடன் சேர்ந்து ஏறியமை அனைவரின் மனங்களையும் நெகிழ வைத்த உருக்கமான காட்சியாக இருந்தது.

தாயும் தந்தையும் இல்லாத நிலையில் வாழ்ந்து வரும் கனிரதன் மற்றும் சங்கீதாவின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு ஆனந்தசுதாகருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யவேண்டும் எனப் பல மட்டங்களில் இருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று ஆனந்தசுதாகரின் மகள் சங்கீதா ஜனாதிபதியின் மகள் சத்துரிக்காவுக்கு உருக்கமான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

*அன்புடன் சத்துரிக்கா அக்காவுக்கு!*

*அம்மாவையும் இழந்து அப்பாவையும் பிரிந்து நானும் அண்ணாவும் அநாதையாய் இருக்கின்றோம். நான் அம்மாவின் வயிற்றில் இருந்தபோதே அப்பா கைது செய்யப்பட்டார். எனக்கு இன்று பத்து வயது. இதுவரைக்கும் அப்பாவுடன் பாசமாகப் பழகியது இல்லை. அம்மாவின் செத்த வீட்டில் தான் அப்பாவின் மடியில் இருக்கக் கிடைத்தது. அதுவும் கொஞ்ச நேரமே. அம்மா இல்லாத இந்த வீட்டில் நானும் அண்ணாவும் அப்பாவுடன் இருக்க ஆசையாய் இருக்கு. அக்கா உங்களுக்குத் தெரியும் அப்பாவின் பாசமும் அருமை யும். நீங்கள் கருணை வைத்து உங்கட அப்பாவுக்குக் கொஞ்சம் சொல்லி எங்கட அப்பாவை மன்னித்து விடச்சொல்லுங்கோ.*

*அக்கா நான் இப்ப கடவுளை விட உங்கட அப்பாவைதான் நம்புறன். ஏனென்றால் இந்த உலகத்தில் அவரால் மட்டும் தான் எங்கட அப்பாவை விடுவிக்க முடியும். இது நடக்க நீங்களும் உங்கட அப்பாவிடம் சொல்லுங்கோ. அன்புள்ள அக்கா அம்மாவும் அப்பாவும் இல்லாத இந்த வீட்டில் எங்களுக்கு வாழவே பிடிக்கவில்லை.*

*அக்கா என்னை உங்கள் தங்கையாக நினைத்து எனது அப்பாவை விடுதலை செய்ய நீங்களும் உதவுங்கள்.*

*நன்றி*
*இப்படிக்கு*
*அன்புள்ள உங்கள்*
*தங்கையாக*
*ஆ.சங்கீதா*

–என்று எழுதப்பட்டுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## ஒரு தமிழ் உணர்வாளனின் மறைவு

**ஈழத்தமிழரின்பால் நீங்காப் பற்றுக்கொண்டிருந்த ஒரு தமிழ் உணர்வாளனின் மரணம், வெறும் தமிழக அரசியல்வாதி என்ற ஏளனப் பார்வையுடன் கடந்து போயிருக்கின்றது.**

**'சசிகலாவின் கணவர்' என்ற அடையாளத்துடன் தமிழ் பற்றாளர் ம.நடராஜனின் மரணத்தை இலங்கைத் தமிழர்கள் வெறும் செய்தியாக நோக்கி, அத்தோடு புறம் தள்ளிச் சென்றிருக்கின்றமை வேதனையிலும் வேதனை.**

**ஈழத் தமிழர்களுக்காக என்றும் கொதித்துக் கொண்டிருந்த இதயம் அது. இலங்கைத் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிவுற்றபோது - அவர்களின் கனலும் ஆயுதங்களும் அடங்கின. ஆனால் தமிழ் மறவன் நடராஜனின் மனம் அடங்கவில்லை. ஈழத் தமிழர்களுக்காக இறுதிவரை கனன்று கொண்டிருந்த நெஞ்சம் அவருடையது என்பது மிகு வார்த்தையல்ல.**

**ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைத் தமது உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளுக்காகச் சாதகமாகப் பயன்படுத்தும் தமிழகத்தின் அற்ப அரசியல்வாதிகளினின்றும் அவர் முற்றும் வேறுபட்டிருந்தார். அந்தப் பணியை அவர் இன உணர்வாக ஆற்றினாரேயன்றி, அரசியலாகச் செய்யவேயில்லை.**

**தமிழரின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டது. அதன் அடையாளமே இல்லாமல் செய்யும் கைங்கரியங்களே இங்கு தொடர்ந்து நடக்கின்றன.**

**ஆனால், அந்தப் போராட்டத்தில் தம்மையே ஆகுதியாக்கிய ஈழமறவர்களுக்காக 'நினைவழியா முற்றம்' ஒன்றை மிகப் பெரும் செலவில் அமைத்து அந்தப் போராளிகளின் நினைவைத் தமிழினம் காலம் காலமாகச் சுமந்து, நினைந்து போற்றுவதற்காக முள்ளிவாய்க்கால் முற்றத்தைத் தஞ்சையிலே அமைத்தவர் நடராஜன்.**

**ஈழப் போராட்டத்தின் பரிமாணங்களை ஒரே இடத்தில் தரிசிக்கக் கூடியதாக அதன் அடையாளங்களை உருக்கொடுத்து பிரமாண்டமான கட்டமைப்பாக உருவாக்கியிருக்கின்றார் அவர்.**

**உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறனை முன்னிறுத்தி, இதற்காகத் தனது முழு உதவிகளையும் வழங்கி, அர்ப்பணித்து, அதனை நிஜமாக்கிக் காட்டியிருக்கின்றார் நடராஜன்.**

**முள்ளிவாய்க்கால் முற்றம் என்ற அந்தப் பிரமாண்ட கட்டமைப்புக்குள் நுழைந்து சிற்பங்களையும், பல நூற்றுக் கணக்கான போராளிகள், மாவீரர்களின் படங்கள், ஓவியங்களையும் போராட்டம் பற்றிய ஆவணங்களையும் பார்வையிட்டால் ஈழப் போராட்டத்தின் கனதி, ஆழம், அர்ப்பணிப்பு, உயர்வு, அதற்குள் பொதிந்து கிடக்கும் அளவிடமுடியாத தியாகம், ஒப்பிட முடியாத வீரச்சிறப்பு எல்லாம் ஒரு தடவை நம்மை சிலிர்ப்பூட்டி உணர்வைக் கொப்பளிக்க வைக்கும்.**

**இலங்கையில் ஈழத் தமிழன் புரிந்த ஒப்புயர்வற்ற போராட்டத்தின் வரலாற்றுப் பதிவு ஒரு சிறிய பகுதியேனும் பொறிக்கப்பட்டிருப்பின், அது அவர் தஞ்சையில் அமைத்த முள்ளிவாய்க்கால் முற்றத்தில்தான் எனலாம்.**

**அதை உருவாக்கும் காலத்தில் இந்திய, தமிழக அரசுகள் சட்டரீதியாகவும், பிறவழிகளிலும் கொடுத்த தொல்லைகள், கஷ்டங்கள் ஏராளம். அவற்றை எல்லாம் சகித்துக் கொண்டும் தானும் ஒரு தமிழ் வீரமறவன் என்ற உணர்வுடன் அந்தப் பணிக்கு செயலுருக் கொடுத்து வெற்றி கண்டவர் நடராஜன்.**

**தமது சொந்த நிலத்தில், தமது சொந்தப் பணத்தில், தமது சொந்த உழைப்பில் ஈழத் தமிழர்களுக்காக ஆற்றிய அவரது அரும்பணி அது.**

**ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை - தலைவர் பிரபாகரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட அந்த விடுதலை வேள்வியின் - சரிதத்தை 'டிஜிட்டல்' திரையில் முழு ஆவணமாக்கும் முயற்சியே கடைசி வரை அவரது கனவாக இருந்தது.**

**ஈழத் தமிழர்களின் கடந்த காலப் போராட்டங்களை ஓரளவு பதிவுக்குள் கொண்டு வந்த அவர், அதனைக் கோத்து ஆரமாக்கும் முயற்சியாகச் சமகால எழுத்துருவாக்கிகள் பலருடனும் தொடர்பைப் பேணினார். இடையறாது பணியாற்றினார்.**

**ஆனாலும், நோயும், அரசியல் நெருக்கடிகளும் அவரை வாட்டின. அந்த முயற்சியில் அவர் எவ்வளவு தூரம் வெற்றி ஈட்டினார் என்பதை அவரது வாரிசுகள்தாம் இனிமேல் வெளிப்படுத்த வேண்டும்.**

**1960களில் தீயாய்ப் பரவிய திராவிட இயக்கங்களின் ஆரம்பம் முதலே, இளைஞனாகத் தன்னை இணைத்துக் கொண்டவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவனாக இருந்தபோதே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று போராடிக் கைதாகிச் சிறை சென்றவர். எம்.ஜி. ஆர். ஆட்சியில் தமிழக மக்கள் தொடர்புத்துறையில் பிரதான அதிகாரியாகப் பணியாற்றியவர்.**

**ஈழத் தமிழர்களின் உரிமைக்கான எழுச்சிப் போராட்டமும், அதற்காகத் தலைவர் பிரபாகரனின் தலைமையில் திரண்ட போராளிகளின் ஒப்புயர்வற்ற தியாகமும் நடராஜன் மனதைக் கவர்ந்தன. உண்மை உணர்வோடு அந்தப் போராட்டத்தை நேசித்தார். போராளிகளுக்காகவும், ஈழத் தமிழ் மக்களுக்காகவும் குரல் எழுப்பினார்.**

**அந்தப் போராட்டப் பெருமையை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் வந்து தரிசித்து, வணங்கிப் போற்றுவதற்கு ஓர் புனித ஆலயமாக 'முள்ளிவாய்க்கால் முற்றம்' என்ற பிரமாண்டத்தை நிறுவியிருக்கின்றார்.**

**ஈழத் தமிழருக்காய் குரல் எழுப்பிய - அவர்களுக்காய் அழுது கொண்டிருந்த - ஓர் இதயம் அடங்கிப்போனது. அது புரியாமல் 'சசிகலா கணவர் மரணம்' என்ற அளவோடு நாம் அதனைச் செய்தியாக்கி நிற்கிறோம்.**

**நம் மண்ணுக்காக தங்கள் உயிரையும் உடலையும் ஆகுதியாக்கிய மாவீரர் களையே மறந்து விட்ட நமது சமூகம், நமக்காக அழுத ஓர் இதயத்தையா நினைவில் கொள்ளப்போகின்றது?**

# மக்கள் பிரதிநிதிகள் வெளிப்படைத்தன்மையுடன் பணியாற்ற வேண்டும் - முன்னாள் எம்.பி. சந்திரகுமார்




கிளிநொச்சி, மார்ச் 23

மக்களால் மக்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் எப்பொழுதும் மக்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தாபகருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் உள்ளூராட்சி தேர்தலில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் சார்பாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகள் மக்கள் முன் சத்தியப் பிரமாணம் எடுக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

மக்களால் மக்களுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட எமது அமைப்பின் சார்பான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மக்கள் முன்னிலையில் உறுதியுரை எடுத்திருக்கிறார்கள்.

மக்கள் பிரதிநிதிகள், மக்களுக்கான பணிகளை எப்போதும் மக்களின் முன்னிலையிலேயே செயற்படுத்த வேண்டியவர்கள். மக்களின் தேவைகளை, மக்கள் நலனை, மக்களின் விருப்பம், மக்களுடைய ஆலோசனை, மக்களின் அவதானிப்பு, மக்களின் பங்கேற்பு ஆகியவற்றின் அடிப்படையிலே செய்ய வேண்டும். தாங்கள் தெரிவு செய்த பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள்? அதை எப்படிச் செய்கிறார்கள் என்பதை மக்கள் அறிய வேண்டும்.

அரசியலிலும் நிர்வாகங்களிலும் என்ன நடக்கிறது? எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது? என்னென்ன திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன? என்ன திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன என்பதை எல்லாம் மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்.

அப்படிச் செய்யும்போது தவறுகளோ குறைபாடுகளோ நிகழ்வதற்கான வாய்ப்புகள் குறையும். ஊழலும் பாரபட்சமும் ஏற்படாது. வெளிப்படைத் தன்மை இல்லாமல் இரகசியமாக எதையும் செய்யும்போதே ஊழலும் பாரபட்சமும் குறைபாடுகளும் நிகழ்கின்றன. இது மக்களுக்கு விரோதமான ஒரு செயற்பாடாகும். ஆகவேதான் நாம் மக்களின் முன்னிலையில், மக்கள் அறியக் கூடியதாக எமது நடவடிக்கைகள் அமைய வேண்டும் என விரும்புகிறோம். இதையே இன்றைய உலகமும் வழிமொழிகிறது.

அனைத்திலும் மக்களுக்கு



உரித்தும் மக்களுடைய பங்கேற்பும் இருக்க வேண்டும் என்ற பாரம்பரியத்தை உருவாக்க வேண்டும்.

நாங்கள் உரிமைக்காகப் போராடியவர்கள். அதற்காக உயர்ந்த அர்ப்பணிப்புகளைச் செய்தவர்கள். ஆகவே எமது மக்களுக்கு எல்லாவற்றிலும் உரித்தும் உரிமையும் உண்டு. கேள்வி கேட்கவும் வழிகாட்டவும் ஆலோசனை சொல்லவும் கூடிய உரிமையும் தகுதியும் மக்களுக்கு உண்டு எனத் தெரிவித்த அவர் இந்த சிந்தனையின் அடிப்படையில், எமது மக்களின் விருப்பத்துக்கும் தேவைக்கும் அமைய மக்களுக்கு விசுவாசமாகவும் அர்ப்பணிப்புடனும் எமது பிரதிநிதிகள் செயற்படுவார்கள் என்று உறுதியுரைக்கின்றோம். இது எமது அமைப்பின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். எப்போதும் மக்களின் நலனையே முதன்மைப்படுத்திச் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டும் என்ற எமது நோக்கத்தின் அடிப்படையில் இந்த பதவி ஏற்பும் அதற்கான உறுதி உரைப்பும் நடந்துள்ளது. எதையும் மக்களுக்குமுன்னிலையில், வெளிப்படைத் தன்மையோடு, மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும் என்பதே எமது அரசியல் அடிப்படையாகும். இதையே நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

அரசியல் உரிமைகளையும் அபிவிருத்தியையும் சமாந்தரமாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யமுடியும் என்பது எமது உறுதியான நிலைப்பாடு. புதிய சிந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்பாகச் செயற்படுவோமாக இருந்தால், நாம் எண்ணிய இடத்துக்குச் சென்றடைய முடியும். இலக்கை, எமது இலட்சியத்தை நிறைவேற்றலாம். எமது மக்கள் ஆற்றலும் துணிச்சலும் சிறந்த பண்பாட்டு ஒழுக்கம் உள்ளவர்கள். அர்ப்பணிப்பில் தலை சிறந்தவர்கள். மக்களின் விடுதலைக்காக, மக்களின் நல்வாழ்வுக்காக தங்கள் உயிரையே அர்ப்பணித்தவர்களைக் கொண்ட மண் எமது மண். ஆகவே, அந்த வழியில் நாம் மக்கள் நலனுக்காகவும் எமது மண்ணின் உயர்வுக்காகவும் எம்மை அர்ப்பணித்துச் செயற்படுவோம். எமது வளர்ச்சியும் ஆற்றல் வெளிப்பாடுமே எமது இனத்தின் விடுதலையைச் சாத்தியமாக்கும்.

நாம் மக்களுக்கு வினைத்திறன் மிக்க நிர்வாகத்தை நடத்துவதற்கு எமது பங்களிப்பைச் செய்வோம். ஊழலற்ற நிர்வாகத்துக்காகப் பாடுபடுவோம். பிரதேசங்களின் வளர்ச்சிக்கும் மக்களுடைய நலனுக்கும் முன்னுரிமை அளித்துச் செயற்படும் திட்டங்களையே முன்மொழிந்து வழிப்படுத்துவோம். பிரதேச அபிவிருத்தியில் சமநிலையைக் கொண்டு வருவோம். பாரபட்சங்களுக்கு எதிராகச் செயற்படுவோம்.

எமது மக்களின் தேவைகளை மையப்படுத்தி, எமது பிரதேசங்களின் வளர்ச்சியை மனதிற் கொண்டே நாம் ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் தனித்தனியான தேர்தல் விஞ்ஞாபனங்களை உருவாக்கினோம். அந்தத் தேர்தல் விஞ்ஞாபனங்கள் உண்மையில் எமது பிரதேசங்களின் வளர்ச்சிகான வழிகாட்டிகள் என்று நான் துணிந்து சொல்வேன். அவற்றை நாங்கள் உருவாக்கும்போது அதற்கான நிபுணத்துவத்துடனேயே செய்தோம்.

இதை நீங்கள் படித்து இதை அறிந்து கொள்ளலாம். ஏற்கனவே படித்தவர்களுக்கு அதன் பெறுமதி விளங்கும்.

நாம் பங்கு பற்றுகின்ற பிரதேச சபைகளிலும் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் முன்மொழியப்பட்ட விடயங்களின் பொருத்தப்பாட்டை வலியுறுத்துவோம் என்றும் தெரிவித்தார்

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் செயற்குழு உறுப்பினர் சு.மனோகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மதத் தலைவர்கள், மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்

(இ-70)

## நாளை

**24.03.2018**
**சனிக்கிழமை**

நட்சத்திரம் : மிருகசீரிடம் பி.ப 3.39 வரை
திதி : ஸப்தமி மு.ப 10.12 வரை
சுபநேரம் : 3.16 –04.46 வரை
இராகுகாலம் : 09.16 – 10.46 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# பிரதமருக்கு எதிரான பிரேரணை; கூறப்பட்டுள்ள காரணங்கள் 14



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுமுன்தினம் சபாநாயகர் கருஜயசூரியவிடம் ஒப்படைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 55 பேர் கையொப்பமிட்டுள்ள இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சபாநாயகரிடம் ஒப்படைத்தார்.

இந்தப் பிரேரணையில் பிரதமர் மீது நம்பிக்கையில்லாமல் போவதற்கான 14 விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த 14 விடயங்களும் வருமாறு:-

01. முறிகள் மோசடிக்கு வழிசமைக்கும் வகையில் வழமையான நடைமுறைக்கு மாறாக மத்திய வங்கியை நிதி அமைச்சிலிருந்து நீக்கி பிரதமரின் கீழ் கொண்டு வந்தமை.

02. உறவு முறைக்கு சாரமாக செயற்படக்கூடிய, நாட்டின் பிரஜை அல்லாத கறை படிந்த வரலாறு உள்ள அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டமை.

03. அண்மைக்காலத்தில் உலகில் இடம்பெற்ற மிகப் பெரும் நிதி மோசடியான முறிகள் மோசடியுடன் பிரதமர் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளமை எனக் கூறப்படுகின்றமை.

04. தமது அரசியல் நண்பர்களைக் கொண்ட 'பிட்டிபனை' குழுவை நியமித்து ஊழலில் ஈடுபட்டவர்களை பிரதமர் காப்பாற்ற முயற்சித்துள்ளமை.

05. உண்மையான விடயங்களை மழுங்கடிக்கும் வகையில், ஊழலில் ஈடுபட்டவர்களைப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு 2015 ஆம் ஆண்டு மார்ச் 17 ஆம் திகதி விசேட உரையாற்றி, நாடாளுமன்றத்தைத் தவறாக வழிநடத்தியமை.

06. ஊழல் தொடர்பில் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் உறுப்பினர் ஒருவரை மாற்றி மற்றுமொருவரை கோப் குழுவிற்கு நியமித்து, குற்றவாளிகளை நிரபராதிகளாக நிரூபிப்பதற்கு பிரயத்தனம் மேற்கொண்டமை.

07. கோப் குழு செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் விசாரணை நடைபெற்ற காலப்பகுதியில் அதன் உறுப்பினர்களுக்கு அழுத்தம் பிரயோகித்தமை.

08. முறிகள் மோசடியுடன் தொடர்புபட்டார் என ஜனாதிபதி ஆணைக்குழுவில் உறுதி செய்யப்பட்டார் என மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் பீ. சமரசிறியை நிதி அமைச்சின் ஆலோசகர் பதவிக்கு நியமிக்குமாறு அமைச்சரவையில் பரிந்துரைத்தமை.

09. வேறு ஒருவரை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்த போது மீண்டும் அர்ஜுன மகேந்திரனை அந்தப் பதவிக்கு நியமிக்க முயற்சித்தமை.

10. முறிகள் மோசடி காரணமாக பதவியை இழந்த பின்னரும் அர்ஜுன மகேந்திரனுக்கு பிரதமர் தமது அமைச்சில் பதவி வழங்கினார் எனக் கூறப்படுகின்றமை.

11. நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக்கொள்ளாது அர்ஜுன மகேந்திரன் நாட்டிலிருந்து வெளியேறி நீதிமன்றத்தைப் புறக்கணிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியமை.

12. நிதி அமைச்சரால் மாத்திரம் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய 9 சட்டங்களை, மத்திய வங்கியை தமது அமைச்சின் கீழ் கொண்டு வந்தமையின் ஊடாக நடைமுறைப்படுத்தி, அந்தச் சட்டத்தை மீறிமை.

13. பொருளாதார விவகார அமைச்சு, பொருளாதார முகாமைத்துவ உபகுழு ஊடாக நிதி அமைச்சையும் மத்திய வங்கியையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து தேசிய பொருளாதாரத்தை வழிநடத்த முயன்றயைால் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டமை. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டமை.

14. அத்தோடு, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக பதவி வகித்தபோது, கண்டியில் இடம்பெற்ற சம்பவங்களின் போது, நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கத்தவறியமையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த விடயங்கள் காரணமாக அவர் பதவி வகிக்கும் அரசின் செயற்பாடுகள் தொடர்பில் நம்பிக்கை கொள்ள முடியாது என பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-க)

## கண்டி அசம்பாவித இழப்பீடு குறித்த மதிப்பீட்டு அறிக்கை இரு நாள்களுக்குள்!

கொழும்பு, மார்ச் 23

சமீபத்தில் கண்டி மாவட்டத்தில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் பற்றி பாரபட்சமற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்காக பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும்அமைச்சர் கூறினார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்றுமுன்தினம் இவ்வாறு குறிப்பிட்டார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கண்டி வன்முறைகள் திட்டமிட்டுமுன்னெடுக்கப்பட்டன. இந்தச் சம்பவங்களின் பின்னணியில் அரசியல்வாதிகளுக்கு நேரடி தொடர்புகள் உள்ளன.

சேத விவரங்கள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கைகள் இரண்டு நாள்களுக்குள் கிடைக்கும். அதற்கமைய பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க முடியும் என்றும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். (க)

## கொழும்பு – பதுளை ரயில் சேவை பாதிப்பு



கொழும்பு, மார்ச் 23

கொழும்பு - பதுளை ரயில் பாதையில் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. எல்ல தெமோதரவுக்கிடையில் ரயில் ஒன்று தடம் புரண்டமையே இதற்குக் காரணம். இதனை சீர்செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என ரயில்வே கட்டுப்பாட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரயில்வேத் திணைக்கள அதிகாரி விஜய சமரசிங்க தெரிவிக்கையில்-

நேற்றுக் காலை 7.30 க்கு கொழும்பு கோட்டையிலிந்து பதுளைவரை சேவையில் ஈடுபட்டிருந்த இல 45 இரவு தபால் சேவை ரயில் தெமோதர ஆலியெலவிற்கிடையில் தடம்புரண்டது.

இரண்டு ரயில் பெட்டிகள் தடம்புரண்டுள்ளது. இதில் ஒருபெட்டி பாதிக்கப்பட்டுள்ளது. மற்றுமொருபெட்டி ஓரளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மலையகத்திற்கான ரயில்பாதையில் பயணிக்கும் ரயில் பயணிகளுக்கு சிரமங்கள் ஏற்பட்டுள்ளமை குறித்து கவலை தெரிவிக்கின்றோம் எனக் குறிப்பிட்டார்.

இதனைச் சீர்செய்யும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தம்மைத் தாழ்த்துகிறவர் உயர்த்தப் பெறுவர்




ஒரு கட்டடம் பல மாடிகளை உடையதாக கட்டப்பட வேண்டுமானால் அது பல மடங்கு ஆழமாக நிலத்தில் அத்திபாரம் இடப்பட வேண்டும். ஒரு பயிரோ, மரமோ விழுந்து விடாமல் உறுதியாக நிற்க வேண்டுமானால் நிலத்தினுள்ளே ஆழ வேரூன்றி இருக்கும் போதே அது நீண்ட காலம் நிற்க முடியும். அவ்வாறு இறுமாப்புக் கொள்ளாமல் மக்கள் தேவைகள் என்ன என்று அறிந்து அவற்றை நிறைவேற்ற வழிவகைகள் செய்கின்ற சேவையாளனே மக்கள் சேவையாளன் என்று மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவார். ஏனையவர்கள் விரைவிலேயே மக்களால் வெறுக்கப்படுவார்கள்.

ஆண்டவர் இயேசுவும் தாம் இறை மகன் என்ற நிலையை விட்டு இறங்கி, மனித அவதாரம் எடுத்து இவ்வுலகில் ஏழ்மை நிலையிலே பிறந்து துன்பங்கள், பாடுகள், மரணம் மூலமே உயிர்ப்பை அடைந்தார். எனவே அவர் தாம் வாழ்ந்த காலத்திலே நிலை வாழ்வை நாம் உரிமைச் சொத்தாக்கிக் கொள்ள பிறர் மட்டிலே அக்கறையுள்ளவர்களாக, பிறருக்குக் கொடுத்து உதவி, அவர்களின் துன்பங்களிலே அவர்களுக்குக் கைகொடுத்து எம்மைப் பெருமைப்படுத்தி வாழாமல் நாமும் வாழ வேண்டும் என்பதை இயேசு பற்பல செயற்பாடுகள் மூலம் எடுத்து விளக்கினார்.

இறுதியாக இராப்போசனம் அருந்த சீடர்களோடு அமர்ந்தபோது இயேசு சீடர்களுக்கு மாதிரி காட்ட எண்ணி ஒரு பாத்திரத்திலே தண்ணீர் எடுத்து வந்து பன்னிரு சீடர்களின் பாதங்களை கழுவித்துடைத்தார். பின்னர் நான் செய்தது போல நீங்களும் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் என்பதையும் விளக்கமளித்தார். ஆண்டவராக இருந்தவரே தம்மை தாழ்த்தி அமையைப் போல சீடர்களின் பாதங்களை கழுவினார். என்றால் நாம் எல்லாம் எம்மாத்திரம்.

எனவே, ஒவ்வொருவரும் இறைவனுக்கு ஏற்ற வாழ்க்கை வாழ இத்தவக்காலம் எமக்கு ஞான வழிகளைச் சொல்லித் தருகின்றது. எமது மனம் போன போக்கில் உலகியல் வாழ்விலே மூழ்கித் தவிக்காமல் எம்மைப் போல மற்றவர்களை மதித்து, ஏற்று வாழும் வாழ்வை எமதாக்கிக் கொள்ளும்போது எம்முடைய வாழ்வும் இறைவனுக்கு உகந்த வாழ்வாக மாறும் இதன் மூலமாக இறைவன் எம்மை தமக்கு உகந்த கருவிகளாக மாற்றி உயர்த்துவார். துன்புறுவோருக்காகவும் இறைவனிடம் வேண்டுவோம்.

- அன்ரனி பீற்றர்
(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்)

# 32 உள்ளூராட்சிச் சபைகளுக்கான அமர்வுகள் மார்ச் 27 முதல் ஆரம்பம்

மட்டக்களப்பு,மார்ச் 23

கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 உள்ளூராட்சி சபைகளில் அறுதிப்பெரும்பான்மை இல்லாத 32 சபைகளுக்கான முதல் அமர்வுக்கானதிகதியை கிழக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.சலீம் அறிவித்துள்ளார்.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது பற்றி கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் -

கிழக்கு மாகாணத்திலுள்ள 32 சபைகளுக்கான முதல் அமர்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



அதற்கான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பத்திரிகை விளம்பரம் என்பன ஓரிரு தினங்களில் வெளியிடப்படவுள்ளன.

அமர்வு பற்றிய முழு விவரம், எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபைக்கான முதல் அமர்வும், முற்பகல் 11.30 மணிக்கு காரைதீவு பிரதேச சபைக்கான முதல் அமர்வும், பிற்பகல் 3 மணிக்கு நிந்தவூர் பிரதேச சபைக்கான முதல் அமர்வும் நடைபெறவுள்ளன.

மறுநாள் 28ஆம் திகதி அட்டாளைச் சேனை, ஆலையடிவேம்பு மற்றும் இறக்காமம் பிரதேச சபைக்கான முதல் அமர்வுகள் நடைபெறும். 29ஆம் திகதி திருக்கோவில், பொத்துவில் மற்றும் லகுகல பிரதேச சபைக்கான முதல் அமர்வுகளும் இடம்பெறவுள்ளன.

ஏப்ரல் 2 ஆம் திகதி கல்முனை மாநகரசபைக்கான முதல் அமர்வும் நாவிதன்வெளி பிரதேச சபைக்கான முதல் அமர்வும் நடைபெறும். அத்துடன் மீதி பெரும்பான்மையின சபைகளுக்கான முதல் அமர்வுகள் ஏப்ரல் 16ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவித்துள்ளார். (ப)

# பெண்ணைத் தூற்றிய மூவர் விளக்கமறியலில்

திருகோணமலை,மார்ச் 23

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெண்ணொருவரைத் தகாதமுறையில் தூற்றிய மூவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க நேற்று முன்தினம் இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.

சந்தேகநபர்கள் மூவரும் உறவினர்கள் என்பதுடன்,அந்தப் பெண்ணுடன் பணம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொண்டு வந்த நிலையில் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தகாத வார்த்தைகளால் தூற்றியமையை யடுத்து அந்தப் பெண் சந்தேகநபர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் கூறியுள்ளனர். (ப)

# சில்லித்தாரா முட்டையை எடுக்கச் சென்றவர் சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு,மார்ச் 23

வாகரை - மதுரங்குளத்தில் இருந்து குடும்பஸ்தரொருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது என வாகரைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை விநாயகபுரம் கிராமத்தைச்சேர்ந்த கே.கனகலிங்கம் எனும் 31 வயதானநபரேசடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மதுரங்குளத்தில் வாழும் சில்லித்தாரா எனும் தாரா இனத்தைச் சேர்ந்த நீர்வாழ் பறவைகள் குறிப்பிட்ட காலத்தில் முட்டைகளை இட்டு அடைகாப்பது வழக்கம்.

தற்போது அப்பறவைகள் முட்டையிடும் காலம் என்பதால் சில்லித்தாரா முட்டைகளை உணவுக்காக எடுத்து வரும் நோக்கில் குறித்த நபர் அங்கு சென்று முட்டைகளைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்துள்ளார்.

அவ்வேளையில் சேறும் சகதியும் நிறைந்த மதுரங்குளத்தில் மூழ்கியுள்ளார். குளத்திற்குச் சென்றவர் மீண்டும் வந்து சேராதமை குறித்து உறவினர்கள் வாகரைப் பொலிஸாருக்கு அறிவித்தவுடன் தேடுதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் சடலம் குளத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூற்று ஆய்வுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார் சம்பவம் பற்றி மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# மான் இறைச்சி வைத்திருந்தவருக்கு பன்னிரண்டாயிரம் ரூபா அபராதம்

திருகோணமலை,மார்ச் 23

திருகோணமலை - மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மான் இறைச்சியை வைத்திருந்த நபருக்கு 12 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா நேற்று முன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். பலவெனி பியவர - திம்பிரிகஸ்யாய, மஹாதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர் வீட்டில் அனு மதிப்பத்திரமின்றி ஒரு கிலோ 360 கிராம் மான் இறைச்சியை வைத்திருந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மான் இறைச்சியுடன் கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட் டுள்ளார்.

சந்தேக நபரை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் 12 ஆயிரம் தண்டப்பணம் செலுத்துமாறும், அத்தொகையை செலுத்த தவறும்பட்சத்தில் இரண்டு மாதங்கள் சிறைத் தண்டனை விதித்தும் உத்தரவிட்டுள்ளார்.

# வாகரையில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

வாகரைப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாகரைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

கடந்த காலத்தில் வாகரைப் பிரதேசத்தில் மதுபான நிலையம் ஸ்தாபிப்பதை தடை செய்து வந்தோம். ஆனால், மதுபானசாலை இல்லாவிட்டாலும் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுகின்றது.எனவே சட்டவிரோத மதுபாவனை மற்றும் கசிப்பு உற்பத்தி நடைபெறுகின்றது. கிராம பொது அமைப்புக்களின் உதவியுடன் பொலிஸார் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# உண்டியலை உடைத்த திருடன் மடக்கிப்பிடிப்பு

நிந்தவூர் பிர்தௌஸ் ஜும்மா பள்ளிவாசலில் வைக்கப்பட்ட உண்டியலை உடைத்து பணத்தை எடுக்க முயன்றவர் அப்பள்ளிவாசல் நிர்வாகிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். இந்த நபர் கொழும்பு தெமட்டகொடையை சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சம்மாந்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.கே. இப்னு அசார் தெரிவிக்கையில்,

சந்தேகநபர் பல திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சிறுபான்மையினர் மீதான வன்முறையை நிறுத்துங்கள்; ஜெனீவாவில் அமெ. உட்பட பல நாடுகள் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் சிறுபான்மையின மக்கள் மீது முன்னெடுக்கப்படும் வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

வன்முறையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று ஜெனீவா மனித உரிமை கவுன்ஸிலில் அமெரிக்கா, பிரித்தானியா ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பல்வேறு நாடுகள் கூட்டாக இணைந்து அறிவித்துள்ளன.

ஜெனீவா மனித உரிமை கவுன்ஸிலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை, ஜெனீவா பிரேரணையை எவ்வாறு அமுல்படுத்தியது என்பது குறித்தான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே உறுப்பு நாடுகள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டின.

2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பின்னர் 2017 ஆம் ஆண்டு இரண்டு வருட கால நீடிப்புக்குள்ளான பிரேரணையை இலங்கை அரசு எவ்வாறு அமுல்படுத்துகின்றது என்பது குறித்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செய்ட்அல்ஹுசேனின்அறிக்கை மீதான விவாதமே இவ்வாறு நடைபெற்றது.

முதலில் பிரித்தானிய பிரதிநிதி உரையாற்றுகையில் –

நாங்கள் அமெரிக்காவுடன் இணைந்து எமது நிலைப்பாட்டை இலங்கைக்கு அறிவிக்கிறோம். ஐ.நா. பிரேரணையின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். காணாமற் போனோர் அலுவலகம் சாதகமாக இருக்கிறது.

ஆனால், தாமதமான நிலைமையே எமக்கு அதிருப்தியை ஏற்படுத்துகிறது.

சிறுபான்மை இனமக்கள் மீதான வன்முறையை நிறுத்த வேண்டும். வைராக்கிய பேச்சை நிறுத்த வேண்டும். அதிகார பரவலாக்கலை முன்னெடுத்து காணாமற் போனோர் மீதான உண்மையை அறிய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

பல்கேரியப் பிரதிநிதி உரையாற்றுகையில் –

ஐரோப்பிய ஒன்றியம் சார்பான இந்த அறிக்கையை விடுக்கிறோம். இலங்கை மனித உரிமைகள் மீதான அக்கறையை செலுத்த வேண்டும். சில காரணிகள் சாதகமாக இருக்கின்றன. ஆனால், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் நாட்டின் பிரதிநிதி உரையாற்றுகையில் –

இலங்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. காணாமற்போனோர் அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும். சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

சுவிற்ஸர்லாந்து நாட்டின் பிரதிநிதி உரையாற்றுகையில்–

சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும். வன்முறைகளை ஏற்படுத்தும் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்கொண்டுவரப்பட வேண்டும். ஜெனீவாப் பிரேரணைகளை, பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும். சரணடைந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியல்களை வெளியிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(கு)

குடியரசு தின நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொள்ள

## பாகிஸ்தான் பயணமானார் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, மார்ச் 23

பாகிஸ்தான் ஜனாதிபதி மம்னூன் ஹூசைனின் விசேட அழைப்பை ஏற்று பாகிஸ்தான் குடியரசு தின கொண்டாட்ட நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கு இடையிலான நட்புறவை நினைவுகூரும் வகையில் ஜனாதிபதி இந்த நிகழ்வில் கலந்துகொள்வதுடன், அண்மைக் காலத்தில் இலங்கையின் அரச தலைவர் ஒருவருக்கு இதுபோன்றதொரு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 1956 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி பாகிஸ்தான் மக்கள் குடியரசாக மாற்றப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 23 ஆம் திகதி மக்கள் குடியரசு தினமாக கோலாகலமான முறையில் கொண்டாடப்படுகிறது.

இம்முறை இந்த விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அமோகவரவேற்பளிப்பதற்காக பாகிஸ்தான் அரசு சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

தனது இரண்டு நாள் உத்தி யோக பூர்வ விஜயத்தின் போது பாகிஸ்தான் ஜனாதிபதி மம்னூன் ஹூசைன் மற்றும் பிரதமர் சஹீத்கான் அப்பாஸ் ஆகியோரையும் ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இருநாடுகளுக்குமிடையி லான பொருளாதார, வர்த்தக மற்றும் கல்வி ஆகிய துறைகளில் உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வுள்ளது.

மேலும், ஜனாதிபதி இந்த விஜயத்தின் போது இருநாடுகளுக்கிடையில் கல்வி மற்றும் சுற்றுலா துறை தொடர்பில் நான்குபுரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

## உலக நீர் தினத்தை முன்னிட்டு தண்ணீர் பவுஸர் வழங்கல்




கொழும்பு, மார்ச் 23

உலக நீர்தினத்தை முன்னிட்டு மாத்தறை, மொனராகலை மற்றும் கிழக்கு பிரதேசத்திற்கான குடிதண்ணீர் பவுஸர்களை வழங்கும் நிகழ்வு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமின்தலைமையில்நடைபெற்றது.

நீர்வழங்கல் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் வழங்கப்பட்ட குடிதண்ணீர் பவுஸர்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் ஒருங்கிணைப்பு சேவை மத்திய நிலையங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் சகலருக்கும் பாதுகாப்பானதூய குடிதண்ணீரை வழங்கும் நோக்கில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் குடிதண்ணீரில் கடல் நீர் கலந்துள்ள பகுதிகளில் குழாய் மூலம் குடிதண்ணீர் கிடைக்கப்பெறாத பகுதிகளுக்கும் குடிதண்ணீர் பவுஸர்களை பெற்றுக் கொடுப்பதற்கு நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் ஆலோசனைக்கமைவாக நகர திட்டமிடல் மற்றும் தண்ணீர் வழங்கல் அமைச்சு இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் பவுஸர் வழங்கும் கருத்திட்டத்திற்காக 23 கோடியே 50 லட்சம் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

முன்னர் குருநாகல், புத்தளம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, பதுளை, அம்பாந்தோட்டை, பொலன்னறுவை, காலி மற்றும் கொழும்பு முதலான மாவட்டங்களுக்கான குடிதண்ணீர் பவுஸர்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ரோஸி சேனாநாயக்க கொழும்பு மாநகர சபையின் மேயராக நேற்றுக் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். கொழும்பு மாநகர சபையின் முதலாவது பெண் மேயர் ரோஸி சேனாநாயக்க என்பது குறிப்பிடத்தக்கது.

## நேபாள ஜனாதிபதி பிந்தியாதேவிக்கு மைத்திரிபால வாழ்த்துச் செய்தி

நேபாள ஜனாதிபதி பிந்தியா தேவி பண்டாரி அம்மையார் மீண்டும் நேபாள ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நேபாள ஜனாதிபதிக்கு விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ள ஜனாதிபதி, இலங்கை அரசும் மக்களும் அவருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

நேபாள நாடாளுமன்றத்தால் திருமதி பிந்தியாதேவி பண்டாரி மீண்டும் நேபாள ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டமையானது அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கையை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.



திருமதி. பிந்தியா தேவி பண்டாரியின் தலைமைத்துவத்தின் கீழ் நேபாள அரசும் மக்களும் நல்லாட்சி, சமாதானம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள இயலுமானதாக அமையும். இலங்கைக்கும் நேபாளத்திற்குமிடையேபலதசாப்தங்களாக நிலவிவரும் கலாசார, கல்வி மற்றும் சமய ரீதியான தொடர்புகளை மேலும் விருத்தி செய்வதற்கு அவருடன் ஒன்றிணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம் என்றும் ஜனாதிபதி தமது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதியப் பொதுக் கூட்டம்

கோப்பாய், மார்ச் 23
வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர்பிரிவிலுள்ளஅரசசேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 9 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வு நிலை கோட்டக் கல்வி அலுவலர் வை.குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச செயலர்திருமதிசுபாஜினிமதியழகனும் சிறப்பு விருந்தினர்களாக வலி கிழக்குப்பிரதேச செயலக கணக்காளர் திருமதி கவிதாம்பிகை பிரதீபனும், கௌரவவிருந்தினராக யாழ் மாவட்ட ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தலைவர் பொ. கமலநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

# கண்டி மாவட்டத்தில் கலவரம் பரவ பொலிஸ் மா அதிபரே பொறுப்பு

## அவர் ராஜினாமா செய்யவேண்டும்; நாடாளுமன்றில் ஹிஸ்புல்லாஹ்

கொழும்பு, மார்ச் 23
திகண உள்ளிட்ட கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற கலவரத்தை கட்டுப்படுத்த பொலிஸார் தமது கடமைகளை உரிய முறையில் செய்யத்தவறியமைக்காக, கலவரத்துக்கான முழுப் பொறுப்பையும் பொலிஸ்மா அதிபர் ஏற்றுக் கொண்டு தனது பதவியை உடன் இராஜினாமாச் செய்ய வேண்டுமென புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் குறிப்பிட்டுள்ளார்.



நம்பிக்கைப் பொறுப்புகள் திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –
கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வன்முறையின் போது பொலிஸார் கைகட்டி வேடிக்கை பாரத்துள்ளனர். பொலிஸார் தமது துப்பாக்கிகளை பயன்படுத்தியிருந்தால் வன்முறையை கட்டுப்படுத்தியிருக்க முடியும். இதன் போது வன்முறையை கட்டுப்படுத்த பொலிஸார் தமது கடமைகளை உரிய முறையில் செய்யவில்லை.

பொலிஸாரின் முன்னிலையில் பள்ளிவாசல்கள் தாக்கி எரிக்கப்பட்டன. பொலிஸார் சரிவர செயற்பட்டிருந்திருப் பார்களேயானால் நிலைமை மோசமடையாமல் தடுத்திருக்கலாம்.

இது மிலேச்சத்தனமான நாடு என்ற அவமானம் சர்வதேச மட்டத்தில் ஏற்பட இந்த சம்பவம் காரணமானது. நாடு பொருளாதார ரீதியில் பின்னடைந்துள்ள நிலையில் இந்த கலவரம் மேலும் சுமையை ஏற்படுத்தியுள்ளது என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (க)

# தினசரி ராசி பலன் (23.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் பங்குனித்திங்கள் 09 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஷஷ்டித்திதி பகல் 12.03 மணி வரை பின்னர் ஸப்தமி. நட்சத்திரம். ரோகினி மாலை 4.57 மணி வரை பின்னர் மிருகசீரிடம். மரணயோகம் மாலை 4.57 வரை பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 10.46 மணி முதல் 12.17 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 06.13 மணி முதல் 07.43 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *பங்குனி மாத வளர்பிறை ஸப்தமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *ரோகினி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** - ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். எல்லா வேலைகளும் தடையின்றி முடியும். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வார்கள்.

**ரிஷபம்** - அதிஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டாகும். வியாபாரத்தில் பழைய கடன்கள் வசூலாகும். தாய் வழிச் சொத்துக்கள் தடையின்றி வந்து சேரும்.

**மிதுனம்** - கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் பிரச்சினைகள் உண்டாகும். உறவினர்கள் பகைத்துக் கொள்வார்கள். சுயதொழில் புரிவோருக்கு பெரும் நட்டம் உண்டாகும்.

**கடகம்** - இனிமையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வெளிநாட்டு உறவினர் வரவால் கலகலப்பு நிறைந்திருக்கும்.

**சிம்மம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். தேகசுகம் ஓரளவு சீராக இருக்கும். தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகமாகும்.

**கன்னி** - உயர்வான நாள். வருமானம் உயரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் 'ஓஹோ' என்று நடக்கும். உத்தியோகத்தில் எதிர்பாராத வகையில் உயர்வுகள் கிடைக்கும்.

**துலாம்** - துன்பமான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் சலசலப்புக் காணப்படும். தொழிலில் ஆதாயம் குறையும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகம் காட்டுவார்கள்.

**விருச்சிகம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடுவதில் தடை, தாமதமாகும். வியாபாரத்தில் லாபம் குறையும்.

**தனுசு** - இன்பமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். புதிய வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

**மகரம்** - இணக்கமான நாள். பொருளாதாரம் மேம்பாடடையும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். இதுவரை பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்பு உண்டாகும். சகோதர உறவு வலுவடையும்.

**கும்பம்** - சலனம் மிகுந்த நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். தொழிலில் நட்டமும், பல இடையூறுகளும் உண்டாகும். உத்தியோகத்தில் கூடுதல் நேரம் உழைக்க வேண்டிவரும்.

**மீனம்** - விருத்தியான நாள். பணப்புழக்கம் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். குடும்பத்தில் பாசமும், நேசமும் நிறைந்திருக்கும். செய்தொழில் விருத்தியடையும்.

**சந்திராட்டம நாள்: சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# பணவீக்கம் 3.2 சதவீதமாக வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 23
கடந்த பெப்ரவரி மாதம் பணவீக்கம் வீழ்ச்சி கண்டிருந்தது என தொகை மதிப்பீட்டு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சத்தர சிங்ஹ தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டு பணவீக்கம் பற்றிய விவரங்களை அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம், ஜனவரியில் 5.4 சதவீதமாக இருந்த பண வீக்கம் பெப்ரவரியில் 3.2 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

உணவுப் பொருள்களின் விலை மட்டம் வீழ்ச்சி கண்டமையே பணவீக்கம் குறைவடைந்தமைக்கு பிரதான காரணம் என்று திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரக்கறி, மிளகாய், சின்ன வெங்காயம், அரிசி, மீன், உருளைக் கிழங்கு, சீனி முதலான பொருள்களின் விலை மட்டங்கள் குறைந்துள்ளன.

எனினும், தேங்காய், கோழி இறைச்சி போன்றவற்றின் விலைகள் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 23
'எங்கள் நினைவுகளில் தோழர் சண்முகதாசன்' எனும் தொனிப் பொருளில் நினைவுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பொது நூலக சிற்றுண்டிசாலை மண்டபத்தில் ஏ.சி. ஜோர்ச்தலைமையில் இடம் பெறவுள்ளது.

அன்னாரை நினைவு கூர்ந்து பலர் உரையாற்றவுள்ளனர். ஆர்வலர்களை வருகை தருமாறு யாழ். மார்க்ஸியக் குழு கேட்டுக் கொண்டுள்ளது. (இ)

## வலி. கிழக்கில் வெற்றி பெற்ற சுயேச்சைக் குழுவினர் ஞாயிறன்று சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம், மார்ச் 23
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வடபிரதேசச் செயலாளர் கா.கதிர்காமநாதன் (செல்வம்) தலைமையில் வலி கிழக்கு பிரதேச சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் நடைபெறும்.

பொது மக்கள் முன்னிலையில் நடைபெற இருக்கும் மேற்படி சத்தியப்பிரமாண நிகழ்வில் பிரதம விருந்தினராக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்தில்வேல் கலந்து கொள்வார். (இ)

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை –

**கிளிநொச்சிப் பிரதேசத்தில்** – கோவிந்தன் கடை சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி,கறுப்பிக்குளம், உடச்சகண்டி, மாயவனூர், இராமநாத புரம், சாந்தபுரம், இரணைமடு, திருவையாறு, தேராவில், இருட்டுமடு, மூங்கிலாறு, உடையார்கட்டு, கைவேலி, சுதந்திரபுரம், தேவிபுரம், வள்ளிபுனம், 68வது பிரிவு இராணுவமுகாம், 683வது பிரிவு இராணுவமுகாம், 18 VIR இராணுவமுகாம், இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி விவசாய பயிற்சி நிலையம், SFHQ இரணைமடு, Hidramani ஆடைத்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில்** – நீராவிபுரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# மாதாந்த உரை

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாணம் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த உரை நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நூலக குவிமாட கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் 'நவீன ஓவியங்கள் ஒரு பார்வை' எனும் தலைப்பில் ஓவியரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான கோ.கைலாசநாதன் உரையாற்றவுள்ளார்.

நிகழ்வில் ஓவிய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ள முடியுமென வாசகர் வட்டத்தினர் தெரிவிக்கின்றனர். (இ)

# காலநிலைகளை அறிந்து கொண்டு பயிரிடுவோம்!

**வானிலையை சீராக வைப்பதற்கு உரிய வழிமுறைகள் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக உலக வானிலை தினம் மார்ச் 23ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.**

உலக வானிலை அமைப்பு, 1950இல் துவக்கப்பட்டது. காலநிலை , வானிலை, தண்ணீர் போன்றவற்றில் ஆய்வுகளை மேற்கொள்வதில், ஐ.நாவின் சிறப்பு அமைப்பாக 1951முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது இந்த அமைப்பில், இந்தியா உட்பட 191 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. சுகாதாரம், உணவு, விவசாயம், பாதுகாப்பான தண்ணீர்,வறுமை ஒழிப்பு, இயற்கை பேரழிவுகளை தவிர்த்தல் போன்ற பணிகளை இவ் அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

வானிலை மாறுபடுவதால் தற்போதைய காலநிலை மாற்றம் மற்றும் வெப்பமயமாதலால் மனிதர்கள் மட்டுமின்றி, மற்ற உயிரினங்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது இன்றைய தலைமுறைக்கு, சவாலாக திகழ்கிறது. தொழிற்சாலைகளால் காற்றில் கார்பன்டை ஒக்சைடின் அளவு அதிகரிக்கிறது. ஓசோன் பாதிப்புக்குள்ளாகி, பூமியில் வெப்பம் அதிகரிக்கிறது. தொழிற்சாலைகள் வெளியிடும் கார்பன்டை ஒக்சைடின் அளவு அதிகரிப்பதால், சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. இதில் வளரும் நாடுகளை விட, வளர்ந்த நாடுகளுக்குத் தான், அதிக பங்கு இருக்கிறது.

**காத்திருக்கும் அபாயம்**

வெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாறுபாட்டால், வரும் காலத்தில் வறட்சி, வெள்ளப் பெருக்கு, புயல் போன்ற பாதிப்புகளை அடிக்கடி சந்திக்க நேரிடும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். வெப்பம் அதிகரிப்பதால் உலகில் உள்ள பனிப்பாறைகள் உருகி எதிர்காலத்தில் கடல் நீர்மட்டம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் நிலப் பகுதிகள் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்படும். மற்ற நாடுகளைப் போல, இந்தியாவும் நாட்டில் உள்ள நதிகளை இணைப்பது குறித்த சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அதனை நடை முறைப்படுத்த வேண்டும். இதன் மூலம் ஒரு பகுதியில் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்க முடியும்.

> ❝ பயிர்ச் செய்கையில் நிலத்தைப் பண்படுத்துவது தொடக்கம் அறுவடை செய்வது வரை முக்கியத்துவம் பெறும் மழைவீழ்ச்சி சரியான முறையில் கிடைப்பது உயர்ந்தளவான விளைச்சலைப் பெறுவதற்கு மிகவும் முக்கியமான தாகும். ❞

**காலநிலை என்றால் என்ன?**

காலநிலை என்பது வளிமண்டலத்தின் பல்வேறு பண்புகளின் அதாவது மழை வீழ்ச்சி, வெப்பநிலை, ஈரப்பதன், காற்றின் வேகம், வளியமுக்கம், சூரிய வெளிச்சம், சூரிய கதிர்வீச்சு என்பன வற்றின் நீண்ட கால போக்குகளாகும். இப்பண்புகளில் மழை வீழ்ச்சி, வெப்பநிலை, சீரப்பதன், காற்றின் வேகம், சூரிய வெளிச்சம், சூரிய கதிர் வீச்சு ஆகியன விவசாயத்தில் மிகவும் முக்கியமானவையாகும்.

காலநிலை என்பது மேற்குறிப்பிட்ட பண்புகளில் நாம் எதிர்பார்க்கும் பெறுமானங்கள் ஆகும்.

வானிலை என்பது வளிமண்டலத்தின் பல்வேறு பண்புகளின் அதாவது மழைவீழ்ச்சி, வெப்பநிலை, சீரப்பதன், காற்றின் வேகம், வளியமுக்கம், சூரிய வெளிச்சம், சூரிய கதிர் வீச்சு என்பன வற்றின் தற்போதைய நிலையாகும். வானிலை என்பது மேற்குறிப்பிட்ட பண்புகளின் தற்போது எமக்குக் கிடைக்கும் பெறுமானம் ஆகும்.

**மழை வீழ்ச்சி**

விவசாயத்தின் முன்னேற்றம் அல்லது வீழ்ச்சி, தாவரமொன்றின் பரவல் என்பனவற்றைத் தீர்மானிக்கும் மிகவும் முக்கிய காரணியாகும். பயிர்ச் செய்கையில் நிலத்தைப் பண்படுத்துவது தொடக்கம் அறுவடை செய்வது வரை முக்கியத்துவம் பெறும் மழைவீழ்ச்சி சரியான முறையில் கிடைப்பது உயர்ந்தளவான விளைச்சலைப் பெறுவதற்கு மிகவும் முக்கியமானதாகும்.

குறைந்த மழையுடன் நிலத்தைப் பண்படுத்தி, நாற்றுக்களை நட்டு, செடியின் உச்ச வளர்ச்சியின் போது உயர்ந்தளவான மழை பெய்து, பூக்கும் போது ஓரளவான மழையுடன், அறுவடை செய்யும் போது மிகக் குறைவான மழையுடன் சிறந்த விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும். பயிரின் ஆவியுயிர்ப்பு, ஆவியாதல் என்பன மழையின் காரணமாக உகந்த மட்டத்தில் பராமரிக்கப்படும். பயிர்களின் வர்க்கத்திற்கு அமைய மழை வீழ்ச்சியின் அளவு செல்வாக்குச் செலுத்தும். பெரும்பாலும் பயிர்ச் செய்கை அட்டவணை மழைவீழ்ச்சிப் போக்கிற்கு அமைய அதற்கு சமாந்தரமாக மேற்கொள்ளப்படும்.

நீர் மழையின் மூலம் கிடைக்காத போது நீர்ப்பாசன நீரின் மூலம் அத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். மழை மானியின் மூலம் மழை வீழ்ச்சியை அளவிடலாம். இந்த அளவீடு மில்லி மீற்றரில் அல்லது அங்குலத்தில் குறிப்பிடப்படும். மண்ணிலுள்ள நீரின் அளவு மழைவீழசியின் மூலம் தீர்மானிக்கப்படுவதால், இது பயிர்ச் செய்கைக்கு மிகவும் முக்கியமானதொரு காலநிலை சுட்டியாகும்.



> ஜூன் 21 – மிக நீண்டநாள் (12.30 மணி நேர சூரிய ஒளி)
> டிசெம்பர் 21 – குறுகிய காலம் (11.40 மணி நேர சூரிய ஒளி)

**வெப்பநிலை**

வெப்பநிலையை வெப்பமானியின் மூலம் அளவிட முடியும். இதுவும் பயிரின் உற்பத்தியில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான ஒரு காரணியாகும். விதை முளைத்தல், பயிரின் உடற்றொழிலியல் செயற்பாடுகள், பூக்கள் உருவாதல், ஒளித்தொகுப்பு என்பன வெப்பநிலைக்கு அமைய வேறுபடும். மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் உகந்த அளவில் இடம்பெறுவதற்கு வெப்பநிலை உகந்த அளவில் காணப்படல் வேண்டும். எனவே பயிரின் தேவைக்கு ஏற்ப வெப்பநிலை கிடைப்பது மிகவும் முக்கியமானதாகும். கூடிய வெப்பநிலையைப் போலவே, குறைவான வெப்பநிலையும் பயிர்ச்செய்கையை மிகவும் மோசமாகப் பாதிக்கும்.

வெப்பநிலை பெரும்பாலும் உயரத்திற்கு ஏற்ப வேறுபடும். உயரம் கூடும் போது வெப்பநிலையின் அளவு குறையும். இங்கு பகல் வெப்பநிலையைப் போலவே இரவு வெப்பநிலையும் பயிர்ச்செய்கைக்கு முக்கியமானதாகும். உதாரணமாக கிழங்குப் பயிர்களுக்குப் பகல் வேளையில் உகந்த அளவான வெப்பநிலையும், குறைந்தளவான இரவு வெப்பநிலையும் காணப்படல் முக்கிய மானதாகும். இல்லாவிடில் கிழங்குகள் உருவாகும் அளவு குறையும்.

**ஒளியின் தேவை**

பயிரின் வளர்ச்சியை பாதிக்கும் ஒரு பிரதான காரணியாகும். ஒளி பல நிறங்களைக் கொண்டதாகும். ஒளிச்செறிவு, ஒளியின் தரம், ஒளி கிடைக்கும் கால அளவு என்பன பயிர்களின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும். ஒளிச்செறிவு உகந்த அளவில் காணப்படுவது பயிர்களின் வளர்ச்சிக்குச் சாதகமானதாகும். ஒளிச்செறிவு அதிகமாகும் போது பகல் நேரத்தில் பயிர்கள் வாடும். இது சாதகமான ஒன்றல்ல. விதை முளைப்பதையும், பயிர்களின் வளர்ச்சியையும் ஒளியின் தரம் பாதிக்கும். புற ஊதாக்கதிர்கள் தாவரத்தின் வளர்ச்சியைப் பாதிக்கும். தாவரங்களின் அடர்த்தி, பயிர்களின் உயரம் என்பன ஒளியின் தரத்தைத் தீர்மானிக்கும்.

ஒளி கிடைக்கும் கால அளவும் பயிர்களின் வளர்ச்சியைப் பரவலாகப் பாதிக்கும். இலங்கையில் மிக நீண்ட நாள் ஜூன் 21ஆம் திகதியாகும். அன்றைய தினம் சுமார் 12.30 மணித்தியாலங்களுக்குச் சூரிய ஒளி கிடைக்கும். குறுகிய காலம் டிசெம்பர் 21 ஆம் திகதியாகும். அன்றைய தினம் 11.40 மணித்தியாலங்களிற்கு ஒளி கிடைக்கும். பெரும்பாலான பயிர்களிற்கு ஒளி கிடைக்கும் கால அளவிற்கேற்ப அவற்றில் பூக்கள் உருவாவது தூண்டப்படும்.

அவை ஒளிக்குத் தூண்டற்பேறு டைய தாவரங்கள் எனப்படும். இதற்கேற்ப குறுகிய பகற்கால தாவரங்கள் (பூக்கள் உருவாக குறுகிய பகற்காலம் அவசியமாகும்), நீண்ட பகற்கால தாவரங்கள் (பூக்கள் உருவாகுவதற்கு நீண்ட பகற்காலம் அவசியமாகும்), நடுநிலையான தாவரங்கள் என வகைப்படுத்தலாம்.

உதாரணம் : குறுகிய பகற் கால தாவரங்கள் - கோப்பி, சிறுநெல், A8, PTB,, கரும்பு, சோயா, போஞ்சி, நிலக்கடலை

நீண்ட பகற் கால தாவரங்கள் -பீற், சலாது, உருளைக் கிழங்கு, பசளி

ஒளித்தொகுப்பில் ஒளி நேரடியாக செல்வாக்குச் செலுத்தும்.

**காற்று**

வளிமண்டலம் நிலையானதல்ல. அதன் அசைவு காற்று எனப்படும். வளி அசையும் வேகத்தை அளவிட அனிமேமானி பயன்படுத்தப்படும். காற்றின் வேகமும் பயிர்ச்செய்கையைப் பாதிக்கும். ஆவியாதல், மண்ணரிப்பு, பயிர்கள் சாய்ந்து விழல், மகரந்தச் சேர்க்கைக்குத் தடையேற்படல், ஒளித்தொகுப்பு இடம்பெறும் அங்கங்களிற்குப் பாதிப்பு ஏற்படல், பீடைகள், நோய்கள் பரவல் என்பன காற்றினால் அதிகமாகும். எவ்வாறாயினும், மெல்லிய காற்று பயிர்ச் செய்கைக்கு சாதகமானதோடு, அதிகளவான காற்று பயிருக்கு மிகவும் விரும்பத்தகாததாகும்.

★



(10ஆம் பக்கம் பார்க்க)

# நிலைமை மோசமடைய முன் விழித்துக்கொள்ள வேண்டும்

## ஜெனீவாவில் கஜேந்திரன் கோரிக்கை

ஜெனீவா, மார்ச் 23

"இலங்கையில், தமிழர்களுக் கும் முஸ்லிம்களுக்கும் எதிராக நிலைமை மோசமடைவதற்கு முன்னர் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அங்கத்துவ நாடுகள் விழித்துக் கொள்ள வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் நேற்றுமுன்தினம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை விடயம் ஆராயப்பட்ட போது அங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

உண்மையான நல்லிணக்கத்துக்கு மட்டுமல்ல, மீண்டும் (மோசமான நிகழ்வுகள்) இடம்பெறாமல் இருக்க வேண்டும் என்பதால் பொறுப்புக் கூறல் என்பது விட்டுக் கொடுக்கப்படவே முடியாததாகும்.



பொறுப்புக்கூறல் விடயத்தில் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகமோ, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளோ தங்களை கட்டாயப்படுத்தி எதுவும் செய்ய முடியாது, குற்றவிலக்களிப்பைத் தொடர்ந்தபடி தங்களின் விருப்பப்படி எப்படியும் செயற்படலாம் என்ற தத்துவத்தால் தான் யுத்தம் முடிந்து எட்டு ஆண்டுகளாக இலங்கை அரசு தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

அதன்தொடராக, இலங்கை பௌத்த, சிங்கள இனத்துவ நாடாக மாற்றும் தனது திட்டத்தை காலத்தால் மோசமான பாதிப்புகளுக்கு மத்தியில் அது தீவிரப்படுத்தியிருக்கின்றது.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை தொடக்கம் இலங்கைக்குள் இருக்கும் தமிழர் தேசம் ஒழுங்கு முறையாகச் சீர்குலைக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டு வருகின் றது.

உலகம் விழித்துக் கொள்ள முன்னர் தமிழர்களுக்கு எதிரான இன வழிப்புக் கட்டமைப்பை அழிக்கலாம் என்ற இலக்கை அடையலாம் என நம்பிக்கையில் செயற்பட்ட இலங்கை இப் போது சிங்களப் பேரின வாதத்துக்குச் சவால் விடும் வகையில் பொருளாதாரத் தைக் கொண்டுள்ள முஸ்லிம்கள் பக்கம் திரும்பியுள்ளது.

இலங்கையில், தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக நிலைமை மோசமடைய முன்னர் விழித்துக் கொள்ளுமாறு அங்கத்துவ நாடுகளை நாம் மன்றாடி வேண்டுகிறோம்.

இலங்கை விடயத்தில் மாற்று வழியைத் தேடும் ஆணையாளரின் அறிவிப்பை வரவேற்கும் அதே சமயம், மியன்மார் விவகாரத்தை சர்வதேசக் குற்றவியல் நீதி மன்றத்திடம் வழிப்படுத்த வேண்டும் என்ற ஆணையாளரின் பரிந்துரை இலங்கை நிலைமைக்கும் பொருத்தமானது என்று நாம் கோருகின்றோம். – என்றார்.

(உ)

# காலநிலைகளை...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

### ஈரப்பதன்

வளிமண்டலத்திலுள்ள நீரின் அளவு ஈரப்பதன் என பொதுவாகக் குறிப்பிடப்படும். தாவரங்கள் நிலைத்திருப்பதில் ஈரப்பதன் பல தாக்கங்களை ஏற்படுத்தும். வளி மிகவும் உலர்வாக உள்ளபோது மகரந்த மணிகளின் வாழ்தகவு குறையும். அதிகளவான ஈரப்பதன் பயிர்களில் நோய்களினால் ஏற்படும் சேதத்தை அதிகரிக்கும். குறைந்த ஈரப்பதன் உள்ளபோது ஆவியுயிர்ப்பு அதிகரித்து விளைச்சல் குறையும்.

குறிப்பிட்டதொரு வெப்பநிலையில் வளியின் கனவளவில் அடங்கியுள்ள நீராவியின் அளவிற்கும், அதே வெப்பநிலையில் அவ்வளியின் கனவளவை முழுமையாக நிரப்புவதற்குத் தேவையான நீராவியின் அளவிற்கும் இடையிலான நூற்று வீதமே பயிர்ச்செய்கையில் மிகவும் முக்கியமானது ஆகும். இதுவே சாரீரப்பதன் எனப்படும். ஈர, உலர் குமிழ் வெப்பமானியின் மூலம் சாரீரப்பதனை அளக்க முடியும்.

### இலங்கையின் மழை வீழ்ச்சிப் போக்கு

இலங்கையின் மழைவீழ்ச்சிப் போக்கு பல நிகழ்வுகளினால் கட்டுப்படுத்தப்படும். பருவப் பெயர்ச்சிக் காற்று, மேற்காவுகை ஓட்டம், வளிமண்டல அமுக்கம், சூறாவளி என்பனவே இந்நிகழ்வுகள் ஆகும். காற்று, மேற்காவுகையோட்டம் என்பனவற்றினால் மழை வீழ்ச்சிப் போக்கு தீர்மானிக்கப்படும். தாழமுக்கம், சூறாவளி என்பனவற்றின் மூலம் பொதுவான மழை வீழ்ச்சிப் போக்கு மாற்றமடையலாம்.



பருவப்பெயர்ச்சிக் காற்றின் மூலம் இரண்டு மழைக்காலப் பருவங்கள் உருவாகும். இவை வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று, தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று என்பனவாகும். தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று மே முதல் செப்ரெம்பர் வரை பரந்துள்ளதோடு, வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று டிசம்பர் மாதத்திலிருந்து பெப்ரவரி மாதம் வரை பரந்து காணப்படும். இதற்கிடையே மேற்காவுகை மழை பெய்யும். இதில் ஒன்று மார்ச் முதல் ஏப்ரல் வரையும், மற்றையது ஒக்ரோபர் முதல் டிசெம்பர் வரையிலான மாதங்களிலும் பெய்யும்.

இதற்கமைய விவசாய காலநிலை வலயங்கள் முழுவதிலும் பொதுவான மழை வீழ்ச்சிப் போக்கும், எதிர்பார்க்கப்படும் உலர் பெறுமானம், மண் வகை, நிலத்தோற்றப் பண்புகள் என்பன பொதுவானதால், அந்நிலைமைக்கு அமைய பயிர் வர்க்கங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

அதேபோன்று பயிர்ச்செய்கை அட்டவணை, நிலத்தைப் பண்படுத்தல் முதல் விளைச்சலைப் பெற்றுக் கொள்வது வரை இதற்கமைய மேற்கொள்ளப்படல் வேண்டும். இங்கு குறிப்பிட்ட காலநிலை தொடர்பான தெளிவான விளக்கத்தைப் பெற்று, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை இனங்கண்டு பயிர்ச்செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.


A/L's

வாழ்க்கையின் வெற்றியினை தீர்மானிப்பது
பரீட்சை முடிவுகள் மாத்திரம் அல்ல,
உரிய நேரத்தில் எடுக்கும் சரியான
தீர்மானங்களும் தான்..!

BCAS Ranked "Platinum Partner" No.1 once again

Pearson | BTEC | University of Wolverhampton | University at Albany | University of Canberra | RICS | CIOB

HND BUSINESS MANAGEMENT MARKETING | HRM — Leading to BA (Hons) from the UK Universities
HND QUANTITY SURVEYING — Leading to BSc (Hons) from the UK Universities
HND COMPUTING — Leading to BSc (Hons) from the UK Universities
UGC Recognized TVEC Approved
HND BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — Leading to BSc (Hons) from the UK Universities
HND CIVIL ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LLB LAW — Leading to LLB (Hons) from the UK Universities

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்
Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Employer Brand Award 2017 | Asia's Training Excellence Award 2017

BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna

Mount Campus: 54, Galle Road, Mt. Lavinia. T : 011 272 8082
Kandy Campus: 344, Peradeniya Road, Kandy. T : 081 222 4731
Kalmunai Campus: 392/1, Main Street, Kalmunai. T : 067 222 6899
Corporate Office: 32, Dharmarama Road, Colombo 6. T : 0112597217

021 221 9910 | 011 259 7217 | info@bcas.lk | www.bcas.lk

# திட்டமிட்ட வகையிலேயே முஸ்லிம்கள் மீது தாக்குதல்; ஜெனீவா உபகுழுக்கூட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள்!



கொழும்பு, மார்ச் 23

கண்டி திகணவில் திட்டமிட்ட வகையிலேயே முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அரசு தவறி விட்டது என்று ஜெனீவாவில் நடைபெற்ற இலங்கை குறித்த உபகுழுக்கூட்டம் ஒன்றில் சர்வதேச முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய முஸ்லிம்களின் இலங்கைக்கான அமைப்பு இந்த விசேட உபகுழுக்கூட்டத்தை ஜெனீவா வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த உபகுழுக்கூட்டத்தில் சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஐரோப்பிய முஸ்லிம் பிரதிநிதிகள், புலம்பெயர் முஸ்லிம்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டிருந்தனர்.



இதில் கருத்து வெளியிட்ட ஐரோப்பிய முஸ்லிம் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்–

கண்டி திகணப் பகுதியில் முஸ்லிம்கள் மீது திட்டமிட்ட வகையிலேயே தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட அரசாங்கம் தவறிவிட்டது.

அதனால்தான் வன்முறைகள் அதிகரித்தன. இதன்பின்னர் இவ்வாறு வன்முறைகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கக் கூடாது.

குறிப்பாக சர்வதேச சமூகம் இதன் மூலம் அழுத்தத்தைப் பிரயோகிக்க முன்வரவேண்டும் என்று தெரிவித்தனர்.

இதேவேளை, உபகுழுக் கூட்டத்தில்கலந்துகொண்டிருந்த சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர் லுக்மான்ஹரீஸ்கருத்துத் தெரிவிக்கையில்–

முஸ்லிம்களுக்கு எதிராக இலங்கையில் இனவாதக் கருத்துக்கள் பரப்பப்பட்டன. அதுமட்டுமன்றி திகணவில் இடம்பெற்ற வன்முறைகளால் சிங்கள மக்கள்மகிழ்ச்சியுடன்இருக்கின்றனர் என இனவாதக் கருத்துக்கள் பரப் பப்படுகின்றன.

தனிப்பட்ட ரீதியான சம்பவங்களை எடுத்து இவ்வாறு இனவாத பரப்புரைகளை மேற்கொள்கின்றனர். கண்டி வன்முறையானது வீதியில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தால் உருவாக்கப்பட்டது.

அதாவது, இரண்டு சமூகங்களுக்குமிடையில் முரண்பாடுகள் இருக்கின்றமையைதெரியப்படுத்துவதற்கு இந்த வீதியில் இடம்பெற்ற சம்பவம் வெளிக்காட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி முஸ்லிம்கள் போதைப் பொருள்களை இலங்கைக்குள் கொண்டு வருகின்றனர் என்ற கருத்துக்களையும் பரப்புகின்றனர்.

அப்போது முஸ்லிம் நபர் கைது செய்யப்பட்டார் என்றே செய்திகள் வெளியிடப்படுகின்றன. ஆனால் பெரும்பான்மையினர் ஒருவர் கைது செய்யப்படும்போது அங்கு இன ரீதியான அடையாளம் வெளிப்படுத்தப்படுவதில்லை என்றார்.

இதேவேளை, இந்த உபகுழுக்கூட்டத்தில் கண்டியில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பான காணொலிகளும் ஒளிபரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## 60 அடி பள்ளத்தில் வீழ்ந்து ஓட்டோ விபத்து!



மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரவில பகுதியில் 60 அடி பள்ளத்தில் வீழ்ந்து ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார் என மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

கவரவில தோட்டத்திலிருந்து ஹற்றன் நோக்கிப் பயணித்த ஓட்டோ நேற்றைய தினம் அதிகாலை கரவில தோட் டப்பாதையில் பயணித்து கொண்டிருந்த போதே 60 பள்ளத்தில் பாய்ந்து ஹற்றன் பிரதான பாதையில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் ஓட்டோ சாரதி சிறு காயங்களுக்குள்ளானார் என்றும் அதிக முகில் கூட்டம் நிறைந்த காலநிலை காணப்படமையினாலேயே சாரதியின் கட்டுப்பாட்டை மீறி ஓட்டோ விபத்துக்குள்ளானது என மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

## இனவாதத்தை பரப்ப பலர் முயற்சி; நடவடிக்கை எடுக்கப்படும் - மனோ

கொழும்பு, மார்ச் 23

இனங்களுக்கு இடையிலான வன்முறைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தாலும், பலர் இனவாதக் கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர் என தேசிய சக வாழ்வு அரச கருமமொழிகள் அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

இனங்களுக்கிடையிலான தெளிவின்மையே, கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்முறைகளுக்கு காரணமாக அமைந்தது என்றும் அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு கணினிகள் வழங்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் கருத்து வெளியிட்ட தேசிய சகவாழ்வு அமைச்சர் மனோ கணேசன்,

வன்முறை சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

## முத்துராஜவளை சரணாலய பகுதியில் கட்டடம் கட்டத் தடை!

இலங்கையின் மேற்கே கம்பஹா மாவட்டம் முத்துராஜவளை சரணாலயப் பகுதியில் கட்டடம் கட்டுதல் உள்ளிட்ட சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை விதிக்கப்பட்ட தகவலை ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



இந்தப் பகுதியில் 400 ஏக்கர் காணி கட்டட நிர்மாணத்துக்காக வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்ததையடுத்து நேற்று அதிகாலை அந்தப் பகுதிக்கு சென்ற ஜனாதிபதி கண்காணிப்பில் ஈடுபட்டார் எனக் கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த உத்தரவை செயற்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவு விடுத்திருக்கிறார்எனஜனாதிபதிஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

## நிர்வாகிக்கு எதிரான தொழிலாளர் போராட்டம்!



கொழும்பு, மார்ச் 23

நுவரெலியா – தலவாக்கலையில் பெருந்தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தோட்ட நிர்வாகத்திற்குள் பாரபட்சம் காட்டப்படுகிறது என இதன் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நுவரெலியா - தலவாக்கலை பெரிய மட்டுக்கலை பெருந்தோட்டத்தில் தோட்டத் தொழிலாளியொருவருக்கும், கள உத்தியோகத்தர் ஒருவருக்குமிடையில் கடந்த மாதம் 16ஆம் திகதி முரண்பாடு ஏற்பட்டி ருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டதையடுத்து, பிரச்சினை முடிவிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

எனினும், தற்போது தமது தோட்ட நிர்வாகம் கள உத்தியோகத்தருக்கு மாத்திரம் தொழில் வழங்கியுள்ளதாகவும், தோட்டத் தொழிலாளிக்கு தொழி லில் ஈடுபட அனுமதி இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஏனைய தொழிலாளர்கள் தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதேவேளை, தமது தோட்ட அதிகாரி பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் நான்காவது எதிர்ப்பு நடவடிக்கை இது எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# காற்றில் கரைந்த த.தே.மக்கள் முன்னணியின் தமிழ்த் தேசியம்

சமீபத்தில் நெஞ்சைத் தைத்தது ஒரு பதிவு. 1990 முஸ்லிம்களை வெளியேற்றியமை இனச் சுத்திகரிப்பு (ethnic cleansing) தான். இல்லை என்போர் தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலை (genocide) எனக் கூறும் யோக்கிதை அற்றவர்கள் என்பதாக அந்தப் பதிவு அமைந்தது. இந்தப் பதிவை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. காரணம் அதனைக் கூறியிருப்பவர் சட்டத்துறையின்தலைவர் அதுவும்யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவரிடம் இருந்து இத்தகைய பதிவை எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஆனால், பதிவிட்டவர் அவரேதான் குமாரவடிவேல் குருபரன் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறையின் தலைவர்.

பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைமைப் பதவி என்பது சாதாரணமானதல்ல. மதிநுட்பம் மிக்கவர்களாலேயே அதற்கு அருகில் வரமுடியும். அப்பதவியில் அமர்வது என்றால் அதுவும் இளவயதிலேயே அமர்வது என்றால் அதற்கு எத்தகைய அறிவாற்றால் தேவை என்பதை இங்கு சொல்ல வேண்டியதில்லை. குருபரன் 33 வயதுக்குள் இதனை சாத்தியப்படுத்திக் கொண்டார் என்றால் அவரது அறிவாற்றலையும் சட்டத்துறையில் அவருக்கு இருக்கும் திறமையும் எத் தகையது என்பதை எவரும் சொல்லாமலே புரிந்து விடுவார்கள்.

குருபரனின் தந்தைதான் பேராசிரியர் குமாரவடிவேல். 2004 இல் துணைவேந்தராக இவரை நியமிக்க விடுதலைப் புலிகள் ஆதரவு வழங்கியிருந்தனர். ஆனால் அரசியல் காரணங்களால் அவருக்குப் பதவி கிட்டவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் தங்கள் ஆதரவை அவருக்குப் பகிரங்கமாகத் தெரிவித்ததன் மூலம் குமாரவடிவேல் அவர்களுக்கு வேண்டியவர் என்பதைத் தெரியப்படுத்தினர்.

இந்நிலையில், விடுதலைப் புலிகளை அவர்களின் தேசியக் கோட்பாட்டை ஆதரித்த குடும்பப் பின்னணியில்வந்த குருபரன் பதிவு செய்திருக்கும் இந்த வார்த்தைகள் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பற்றிச் சாதாரணமானவர்கள் கொண்டுள்ள அறிவையே அவரும் கொண்டுள்ளாரா என்று எண்ணத் தோன்றுகிறது.

ஒரு சொல்லுக்கான வரைவிலக்கணத்தை பொத்தம்பொதுவாக அனைத்துக்கும்பொருத்திவிடமுடியாது. தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசும் அதன் படைகளும் செய்த அழிப்பை இனவழிப்பு என்று தமிழர்கள் கூறுகிறார்கள். ஆனால் சிங்களப் படைகளுடன் இணைந்து முஸ்லிம் ஊர்காவல் படைகள் கிழக்கின் உடும்பன்குளம், கொக்கட்டிச்சோலை (இரு தடவைகள்), திராய்க்கேணி, கல்முனை, சத்துருக்கொண்டான், வந்தாறுமூலை எனப் பல இடங்களில் தமிழர்கள் படுகொலைகளைப் புரிந்தனர். அப்படியாயின் அவர்கள் செய்தவற்றை எல்லாம் இனவழிப்பு என்று வகை சொல்வதுதானே நியாயம்.

ஆனால் சட்டமறிந்த வரைவிலக்கணங்களைக் கரைத்துக் குடித்த நம் சட்டத்துறைத் தலைவரேமுஸ்லிம்களைச்செய்தமை தவறுஎன்று ஒற்றைச்சொல்லில் கூறிக் கடந்து விடுகிறார். முதல் வேலையாக அவர் தவறு என்ற சொல்லுக்குஅகராதியில்பொருள் தேடிப் படித்துவிட்டு அதற்கும் பிற்குறிப்பு ஒன்றை இடுவது பொருத்தம்.

### முஸ்லிம் மாவீரர்களின் தியாகம் தெரியாதவர்கள்

முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமையை எவருமே நியாயம் என்பதை வலியுறுத்தவில்லை புலிகள் உள்ளடங்கலாக.

விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை வெளியேற்றியபோது அந்த உறுப்பினர்கள் பலர் அவர்களை மீண்டும் சந்திப்போம் என்று கூறியே திரும்பினர். இதேபோன்று முஸ்லிம் மக்களில் பலரும் தாங்கள் மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கையிலேயே சென்றிருந்தனர் என்பதை அவர்களில் பலர் இன்றும் கூறுவர். சில இனவாத சக்திகள் மட்டுமே தமிழர் முஸ்லிம்கள் என்று பிரிந்துநின்று சண்டையிட்டுக் கொண்டனர். இவ்வாறு பிரிந்து நிற்பவர்களுக்கு முஸ்லிம் மாவீரர்களின் தியாகம் தெரியாது என்பதே உண்மை குருபரன் உட்பட.

ஜுனைதீன் என்ற இயற்பெயர் கொண்ட கப்டன் ஜோன்சன் 1985 நவம்பர் 30 ஆம் திகதி தமிழீழத் தாயகத்துக்கு உரமாக முதல் இஸ்லாமியத் தலைவ னாக வீழ்ந்தார். அவரைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு வரை 41முஸ்லிம்கள்மாவீரர்களாகவீழ்ந்தனர். புலிக ளின் மூத்த தளபதிகளில் ஒருவர் முஸ் லிம் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அவர் மரணம் அடையும் வரை அவரது மனைவி தனது மதத்தைப் பின்பற்ற எந்தத் தடையையும் அவர் விதித்திருக்கவில்லை. இத்தகைய சமய இனப் பொறை கொண்டவர்களாகவே விடுதலைப் புலிகள் இருந்தார்கள் இதற்கான சாட்சிகள் இன்றும் உள.



> “விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை வெளியேற்றியபோது அந்த உறுப்பினர்கள் பலர் அவர்களை மீண்டும் சந்திப்போம் என்று கூறியே திரும்பினர். இதேபோன்று முஸ்லிம் மக்களில் பலரும் தாங்கள் மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கையிலேயே சென்றிருந்தனர் என்பதை அவர்களில் பலர் இன்றும் கூறுவர். சில இனவாத சக்திகள் மட்டுமே தமிழர் முஸ்லிம்கள் என்று பிரிந்து நின்று சண்டையிட்டுக் கொண்டனர். இவ்வாறு பிரிந்து நிற்பவர்களுக்கு முஸ்லிம் மாவீரர்களின்தியாகம்தெரியாதுஎன்பதே உண்மை குருபரன் உட்பட.”

### சுமந்திரனின் கருத்து கூட்டமைப்பின் கருத்தா?

இலங்கையின் சட்டத்தைக் கரைத்துக் குடித்திருக்கும் குருபரன் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ நாள்காட்டியைத்தயாரித்த போது ஹஜ் பெருநாளையும் விடுமுறை தினமாக அறிவித்தனர் என்பதை அறியாதிருக்க வாய்ப்பில்லை என்று நம்பலாம். 2002 இன் பின்னர் முஸ்லிம்கள் யாழ்ப்பாணம் மீண்டபோது புலிகள் அவர்களை வரவேற்றிருந்தனர். இந்த மீள்குடியேற்றம்தான் பின்னாளில் வடக்கு முழுவதும் முஸ்லிம்கள் மீள்குடியேறக் காரணமாக அமைந்தது. இந்தப் பின்னணியில் புலிகளின் ஆயுத மௌனிப்புக்குப் பின்னால் அவர்கள் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் வழிவந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் முஸ்லிம்கள் வெளியேற்றம் இனச் சுத்திகரிப்புத்தான் என்று கூறினார்.

அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனோ அன்றி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவோ கண்டித்திருக்கவோ அல்லது அது அவரது தனிக் கருத்து என்றோ கூறவில்லை.

இதனால் அது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கருத்தாகவே நோக்கப்பட்டது. இதை அன்று குருபரன் முக்கிய செயற்பாட்டாளராக இருக்கும்தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், செயலாளர் கஜேந்திரன் ஆகியோர் கூட்டம் போட்டுக் கண்டித்திருந்தனர். ஆனால் இன்று நிலைமை என்ன? குருபரனின் கருத்தை அது அவரது தனிப்பட்ட கருத்து என்று கூறக்கூடத்திராணியற்றவர்களாகதமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரும், செயலாளர் கஜேந்திரனும் பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடக்கின்றனர்.



எல்லா வரைவிலக்கணங்களும் எல்லா நேரங்களிலும் எல்லாவற்றுக்கும் எல்லா இயக்கங்களுக்கும்பொருந்துவதில்லை. அதுபோன்றே இனச் சுத்திகரிப்பு என்ற சொல்லும் முஸ்லிம்களின் வெளியேற்றத்துக்குப் பொருந்தாது. அப்படிக் கூறினால் கிழக்கில் பல தமிழ்க் கிராமங்களில்தமிழர்களைத் துரத்திவிட்டு இன்றுவரை அந்தக் கிராமங்களில் ஏகபோக உரிமைகளை அனுபவித்து வரும் முஸ்லிம்களையும் அவர்களுக்கு ஒத்தாசையாக இருக்கும் அமைச்சர்களையும் என்ன வகைகுள் அடக்குவது என்று சட்டம் படித்தவர் கூற வேண்டும்.

பிற்குறிப்பு ஒன்று இடுவதன் மூலம் மன்னிப்பு இன்றித் தவறைச் சரியாக்கி விடலாம் என்ற அடிப்படையில் பி. கு. 09/03/2018 அன்று என்னால் இத் திகதியில் இடப்பட்ட பின்னூட்டத்தை இத்துடன் இணைக்கிறேன்: வெளியேற்றம் தவறு என ஏற்றுக்கொள்கிறோம் ஆனால் இனச்சுத்திகரிப்பு என்று அதனை வரையறுப்பது தவறு எனக் கூறுவோரின் வாதத்தில் உள்ள நியாயங்களை விளங்கிக் கொள்கிறேன்.

I think it is possible to be reasonably pluralist on this issue.

எனவே இனச்சுத்திகரிப்பு என்று ஏற்றுக்கொண்டால் தான் இனப்படுகொலை என்று சொல்ல யோக்கிதை எமக்குள்ளது என்று நிபந்தனை விதிப்பது முறையல்ல என ஏற்றுக்கொள்கிறேன். எனப் பதிவிட்டதன் மூலம் அவர் நியாயத்தின் வழியில் தவறி விட்டார் என்றே பொருள் கொள்ளமுடியும்.

### இழப்புக்களின் வலியை உணர்ந்தவர்கள் தமிழர்

சிறுபான்மை இனம் ஒன்றின் மீதான அடக்குமுறைகளை – உரிமை மறுப்புகளை – அழிப்புகளை – இழப்புகளை– பிரிவுகளை – துயரங்களை – துன்பங்களை– ஆழ்ந்து அனுபவித்தது நம் தமிழினம். இத்தகைய பின்னணியைக் கொண்ட தமிழர்கள் எவரும் கண்டிக் கலவரத்தில் முஸ்லிம்கள் மீதான வன்முறையை விரும்பியிருக்கவில்லை. ஏனெனில் இழப்புகளின் வலியை நன்குணர்ந்த – அனுபவித்த எந்த ஓர் இனமும் இன்னோர் இனத்துக்கு நடக்கும் அதே கொடுமைகளை விரும்பாது.

மாறாக வெகு சிலரின் பதிவுகள் அத்தகைய பிம்பத்தை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் உண்மையில் எந்த ஒரு தமிழ்த் தேசயவாதியும் சிறுபான்மை இனத்தின் மீது முஸ்லிம்கள் மீது காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தியதில்லை. இதை அடிப்படையாகக் கொண்டு தமிழ்த் தேசியவாதிகளை இனவாதிகளாக குருபரன் சித்திரித்திருப்பது கண்டனத்துக்குரியது.

தமது நெருங்கிய செயற்பாட்டாளரான குருபரனின் கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்காது – கண்ணை மூடிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கட்சி என்று தன்னைப் பிரகடனப்படுத்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வாளாதிருப்பது ஏன்?

\- வித்தகன்

நன்றி: தமிழ்லீடர்

# உங்களுக்குத் தெரியுமா?

1. செய்தி என்பதன்ஆங்கிலச் சொல்லான News என்ற சொல் எப்படி உருவானது?
**ஆங்கிலத்தில் நான்கு திசைகளின் முதல் எழுத்துக்களைச் சேர்த்து உருவாக்கப்பட்டது.**

2. நீரை வீண் விரயமாக்காது விவசாயத்தில் மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசன முறை எது ?
**தூவல் நீர்ப்பாசனம்**

3. 4 சவர்க்காரக்கட்டிகளின் நிறை 160g எனின் 1 டசின் சவர்க்காரக்கட்டிகளின் நிறை என்ன ?
**480g**

4. இரவில் தனது இரையைத் தேடும் பறவை எது ?
**ஆந்தை**

5. 1 மணித்தியாலம் 45 நிமிடங்கள் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்று மாலை 6 மணிக்கு முடிவடைந்தது.

I. போட்டி முடிவடைந்த நேரத்தை நியம நேரத்தில் மாற்றி எழுதுக ?
**18 மணி**

II. போட்டி ஆரம்பமான நேரம் ?
**16 மணி 15 நிமிடம்**

I. கூட்டுக 1/5 + 2/3
**13/15**

II. தசமத்தில் எழுதுக 2 7/10
**2.7**

ஒன்றுக்கும் ஐந்துக்கும் இடைப்பட்ட இலக்கங்களைக்கூட்டி வரும் விடை உரோம எண்ணில்....!
XV

அடுத்து வரும் எண் என்ன ?

**I. 4000, 3500, 3000 (2500)**
**II. 2700, 2800, 2900 (3000)**

80 லீற்றர் கொள்ளக்கூடிய பாத்திரம் ஒன்றில் 3/4 பங்கு நீர் உள்ளது. பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு 5 லீற்றர் கொள்கலனால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்.
**4 தடவை**

பழகப்பழக பாலும் ...... **புளிக்கும்**
ஐயர் வரும் வரை அமாவாசை...... **நிற்காது**
நாற்றம் என்ற சொல்லின் எதிர்ப்பதம் ...... **துர்நாற்றம்**
வினையெச்சச் சொல் ஒன்று ...... **ஓடி**
பறவை என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல் ? **பட்சி**
கோவில் இல்லா ஊரில் ....................................... என்பது பழமொழி
ஆடுகள் அடைக்கப்படும் இடம் பட்டி எனில் குதிரைகள் அடைக்கப்படும் இடம் .... **(லாயம்)**






**41.9540 உடன் 805 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகையாது?**

.................................................................................................

**42.6045 இலிருந்து 350 ஐக் கழிக்க. வித்தியாசம் யாது?**............................................................................

**43.வழங்கப்பட்டுள்ள சதுரக் கோட்டுப்படம் சமபகுதிகாகபிரிக்கப்பட்டுள்ளது. அதன் மொத்த பரப பளவில் 0.3 பகுதியை நிழற்றுக.**



**44.ரூ47.00 விலையுள்ள ஒரு பயிற்சிப் புத்தகத்தையும் ரூ 12.50 விலையுள்ள பேனையையும் வாங்கு வதற்கு என்னிடம் ரூ50.00 உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்?**

.................................................................................................

**45. 420 மாம்பழங்கள் நான்கு பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?**..........................................................

**46.ஒரு போத்தலில் உள்ள நீரின் கனவளவு 750ml அத்தகைய 9 போத்தலில் உள்ள நீரின் கனவளவு யாது?**

**47. கூட்டுக. ¼ + 3/8**

**48. ஒரு பாத்திரத்தை நிரப்புவதற்கு 5 l 540ml கனவளவுள்ள நீர் தேவைப்படுகின்றது. அத்தகைய 4 பாத்திரங்களில் நிரப்பத் தேவையான நீரின் கனவளவு யாது?**

.................................................................................................

**49.ஒருவருக்கு 6 பென்சில்கள் வீதம் 650 பென்சில்களை எத்தனை பேருக்கு கொடுக்கலாம்?**

.................................................................................................. **அவ்வாறு கொடுத்த பின்பு எத்தனை பென்சில்கள் எஞ்சியிருக்கும்?**

**50. மாணவன் ஒருவன் எழுத ஆரம்பித்த ஒரு கட்டுரையின் முதற் பகுதி கீழேதரப்பட்டுள்ளது. அவன் நிறுத்திய இடத்திலிருந்து ஆறு ஆக்க பூர்வமான வாக்கியங்களை எழுதி மீதிப் பகுதியை பூரணப் படுத்துக.**

“சில மாதங்களாகப் புவியின் மேற்பரப்பில் ஒரு மழைத்துளியும் விழவில்லை. கடும் வெப்பத்தின் விளைவாக நிலத்தில் வெடிப்புகள் கோடுகளாகக் காணப்பட்டன. ஆறுகள், குளங்குட்டைகள் கிணறுகள், தடாகங்கள் ஆகியன வறண்டுபோய் இருந்தன. கண்ணிற்குத் தெரியும் அளவிற்குப் பச்சை நிறம் காணப்படவில்லை.

அதிஷ்டவசமாக! திடீரென இடி மின்னலுடன் வானம் மழைபொழியத் தொடங்கியது............

**(ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக இருக்கவேண்டும்)**

1. ...........................................................................................................
...........................................................................................................

2. ...........................................................................................................
...........................................................................................................

3. ...........................................................................................................
...........................................................................................................

4. ...........................................................................................................
...........................................................................................................

5. ...........................................................................................................
...........................................................................................................

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 21 விடைகள் (பகுதி - I)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. 3 | 8. 2 | 15. 3 | 22. 3 | 29. 3 | 36. 2 |
| 2. 1 | 9. 1 | 16. 2 | 23. 2 | 30. 1 | 37. 2 |
| 3. 3 | 10. 2 | 17. 2 | 24. 2 | 31. 3 | 38. 1 |
| 4. 2 | 11. 2 | 18. 2 | 25. 3 | 32. 1 | 39. 1 |
| 5. 3 | 12. 3 | 19. 2 | 26. 2 | 33. 3 | 40. |
| 6. 3 | 13. 3 | 20. 1 | 27. 2 | 34. 3 | |
| 7. 2 | 14. 2 | 21. 2 | 28. 2 | 35. 2 | |

40.

| | | |
|---|---|---|
| 1. பா | க் | 2. கு |
| ம் | | யி |
| 3. பு | ய | ல் |



## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 21 விடைகள் (பகுதி - II)

01. 1) ஏரிக்கரையில் இருந்த புதர்களில் / புதர்களில் 2) அடர்ந்த / அழகான 3) ஏரி
4) காடு 5) ஏரிக்கரை
6) வாத்து / காடு / வாய்க்காலில் / ஏரிக்கரை / ஏரி
02. 1) இரட்டைக்கிளவி 2) வெள்ளிவிழா 3) உலோபங் கூடாது.
03. 1) சகபாடி 2) பொதுநலவாதி
04. 1) கவிதா சந்தையில் மாம்பழம், வாழைப்பழம், தோடம்பழம் ஆகியன வாங்கினாள்.
2) "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பது வள்ளுவர் வாக்கு.
05. 1) வாய்மை 2) புனிதம் 3) ஆதவன்
06. 1) வீணாய்ப் போக்க மாட்டாராம் 2) பனைத் துணையாக் கொள்வர்
07. 1) Black Board 2) Radio
08. 1) what's your name? / What is your name?
09. 1) தயவுசெய்து உள்ளே வரவும் / வாருங்கள் 2) உட்காருங்கள் / இருங்கள்
10. 1) எனது வீட்டு முகவரி
11. 1) தும்ரிய ஸ்தானய
12. 1) பெரியவர் அருகில் சீடன் சென்றான் அல்லது சீடன் பெரியவர் அருகில் சென்றான்.
2) நகம் கடிப்பது தவறான பழக்கமாகும்.
13. 1) உயர்ந்தது 2) சென்றான் 3) பறந்தன
14. 1) மாநிலம் 2) இராச்சியம்
15. 1) நிறையச் சம்பாதித்தல் 2) போருக்கு அழைத்தல்
16. பொருத்தமான வாக்கியங்கள்
17. 1) 8 2) 700
18. 1) 14 2. 0.5
19. 1) 8596 2) 9900
20. 1) 16 2) 160
21. 12070
22. $\frac{2}{8}$ அல்லது $\frac{1}{4}$
23. 3km 200m
24. 4kg 275g
25. 6
26. 1. 115
2. திங்கள், புதன்
27. 200 ரூபா
28. 66
29. கனவுரு
30. 1. 360
2. 72
31. 14 : 40 மணித்தியாலங்கள் / 14 : 40 h

| | | | |
|---|---|---|---|
| 32. 4 | 41. 3 | 51. 3 | 61. 2 |
| 33. 2 | 42. 3 | 52. 3 | |
| 34. 3 | 43. 3 | 53. 3 | |
| 35. 2 | 44. 2 | 54. 1 | |
| 36. 2 | 45. 3 | 55. 2 | |
| 37. 2 | 46. 1 | 56. 3 | |
| 38. 1 | 47. 2 | 57. 2 | |
| 39. 3 | 48. 3 | 58. 3 | |
| 40. 1 | 49. 4 | 59. 1 | |
| | 50. 4 | 60. 3 | |

# சிரிய தலைநகரில் மோட்டார் தாக்குதல்; சந்தையில் 44 பேர் துடிதுடித்துச் சாவு



டமாஸ்கஸ்,மார்ச் 23

சிரியா தலைநகர் டமாஸ்கஸ் நகரில் உள்ள பிரதான சந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட மோட்டார் குண்டுத் தாக்குதலில் 44 பேர் துடிதுடித்துப் பலியாகினர்.

மத்திய கிழக்கு நாடுகள் நேற்று முன்தினம் அன்னையர் தினத்தை வெகு சிறப்பாக கொண்டாடிவந்த நிலையில் சிரியா தலைநகர் டமாஸ்கஸ் நகரில் உள்ள பிரதான சந்தைப் பகுதியில் நேற்று மோட்டார் ரக வெடிகுண்டுகளை வீசி மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் அரசுக்கு ஆதரவான படை வீரர்கள் 11 பேரும், பொதுமக்களில் சிலரும் உயிரிழந்தனர், பலர் படுகாயம் அடைந்தனர் .

கிழக்கு கவுட்டா பகுதியில் உள்ள போராளிக் குழுவினர் இந்தத் தாக்குதலை நடத்தினர் என அரசுதரப்பில் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த நிலையில், இத் தாக்குதலில் 44 பேர் உயிரிழந்துள்ளனர் என, சிரியாவில் உள்நாட்டுப் போர் நிலை வரங்களை கண்காணித்து வரும் பிரிட்டன் நாட்டு மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆதரவாக வாக்களிக்கக் கோரி பேரம்:

## ராஜினாமா செய்த பெரு ஜனாதிபதி

லிமா,மார்ச் 23

நாடாளுமன்றத்தில் ஆதரவாக வாக்களிக்க எதிர்க்கட்சி எம்.பி.க்களிடம் பேரம் பேசினார் என எழுந்த குற்றச்சாட்டால் பெரு நாட்டின் அதிபர் பெட்ரோ பப்லோ குசின்ஸ்கி பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

பெரு நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்து வருபவர் பெட்ரோ பப்லோ குசின்ஸ்கி. இதற்கு முன் அமைச்சராக இருந்தபோது, அவர் பங்குதாரராக இருந்த நிறுவனத்துக்கு அரசு ஒப்பந்தம் வழங்கப் பட்டிருந்தது. இதில் முறைகேடு நடந்திருப்பதாகக் குற்றச் சாட்டு எழுந்தது.



இதற்குப்பொறுப் பேற்று அதிபர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத் தது.

அத்துடன் பதவி நீக்கம் செய்வது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த பெரும்பாலான எம்.பிக்கள் ஆதரவு தெரிவித் தனர். எனவே, விவாதம் நடத்துவதற்கு முன்னதாகவே அவர் பதவி விலகினால் முறையாக இருக்கும் என எம்.பி.க்கள் கருத்துத் தெரிவித்தனர். ஆனால், அதிபர் குசின்ஸ்கி பதவி விலக மறுத்து வந்தார்.

இந்த விவகாரம் கடந்த சில மாதங்களாக பெரு அரசியலில் புயலை கிளப்பி வந்த நிலையில், அதிபருக்கு சாதகமாக வாக்களிக்க எதிர்க்கட்சி எம்.பிக்களிடம் ஆளுங்கட்சியினர் பேரம் பேசும் வீடியோ வெளியானது. இந்த வீடியோ சர்ச்சையை ஏற்படுத்தியதை அடுத்து, அதிபர் பதவியில் இருந்து குசின்ஸ்கி விலகினார்.

## ஆப்கனில் புனிதத் தலம் அருகே 'மனித குண்டு' வெடித்து 32 பேர் பலி

காபூல்,மார்ச் 23

ஆப்கானிஸ்தான் நாட்டில் வசந்தகால ஆரம்ப விழா கொண்டாடப்படும் நிலையில் காபூல் நகரில் உள்ள புனிதத்தலம் அருகே நடைபெற்ற தற்கொலைப்படைத் தாக்குதலில் 32 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் நவ்ருஸ் எனப்படும் பாரசீக புத்தாண்டு தினம் வசந்தகால ஆரம்ப விழாவாக வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், காபூல் நகரின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கார்ட்-இ ஷாகி தர்கா பகுதியில் ஏராள மானவர்கள் வழிபாட்டுக்காக குவிந் தனர். அப்போது, அங்கு வந்த மனிதகுண்டு தற்கொலைப்படை தீவிரவாதி நடத்திய தாக்குதலில் 32 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர்.



காயங்களுடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் இந்தத் தாக்குதலில் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நடைபெற்ற தாக்குதலுக்கு உள்ளூரில் உள்ள ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர்.

## கேம்பிரிட்ஜ் அனாலிடிகா விவகாரம்: தவறை ஒப்புக்கொண்ட பேஸ்புக்

கேம்பிரிட்ஜ் அனாலிடிகா நிறுவனம் பேஸ்புக் பயனாளிகளின் தகவல்களைத் தவறாகப் பயன்படுத்திய விவகாரத்தில் தவறு நடந்திருப்பதை பேஸ்புக் நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

கேம்பிரிட்ஜ் அனாலிடிகா என்னும் நிறுவனம் தங்கள் அரசியல் வாழ்க்கையாளர்களுக்காக பேஸ்புக் பயனாளிகளின் தகவல்களை தவறாகப் பயன்படுத்தியது எனக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.



அமெரிக்க அதிபர் தேர்தலின் போது ட்ரம்பை ஆதரிக்கும் வகையில் இந்த நிறுவனம் பேஸ்புக் பயனர்களின் தகவல்களை சட்டவிரோதமாகப் பெற்றது எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனால் பேஸ்புக் நிறுவனத்தின் மீதான நம்பகத்தன்மை குறைந்து அதன் மதிப்பு சரிய ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில், பேஸ்புக் இழைத்த தவறால், கேம்பிரிட்ஜ் அனாலிடிகா நிறுவனம், பேஸ்புக் பயனர்களின் தகவல்களை பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது என பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஒப்புக் கொண்டுள்ளார்.

அமெரிக்கா - வடகொரியா மட்டுமன்றி

## எம்மையும் சேர்த்து முத்தரப்பு பேச்சு நடத்த வேண்டும்



தென்கொரியா வலியுறுத்து

சியோல்,மார்ச் 23

அமெரிக்கா - வடகொரியா இடையே பேச்சு நடக்க உள்ள நிலையில் எங்களையும் சேர்த்து இது முத்தரப்பு பேச்சாக இருக்க வேண்டும் என தென்கொரிய அதிபர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அடுத்தடுத்து ஏவுகணை சோதனை, அணுகுண்டு பரிசோதனை என உலக நாடுகளை அதிர வைத்த வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன், தற்போது சில மாதங்களாக மனம்மாறி வெள்ளைக்கொடி காட்டி வருகிறார்.

கிம் ஜாங் உன் உடனான பேச்சுக்கு டொனால்ட் ட்ரம்பும் பச்சைக் கொடி காட்டிவரும் நிலையில் வரும் மே மாதத்தில் அமெரிக்கா - வடகொரியா இடையேயான பேச்சு நடக்க இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தப் பேச்சு அமெரிக்கா-வடகொரியா இடையே மட்டும் இருக்கக்கூடாது, எங்களையும் சேர்த்து முத்தரப்பு பேச்சாக இருக்க வேண்டும் எனத் தென்கொரிய அதிபர் மூன் ஜே இன் தெரிவித்துள்ளார்.

## மாலைதீவில் நீதிபதிகள் மீது பயங்கரவாதக் குற்றச்சாட்டு

மாலே,மார்ச் 23

மாலைதீவில் முன்னாள் ஜனாதிபதி, நீதிபதிகள், 4 எம்.பிக்கள், முன்னாள் பொலிஸ் ஆணையாளர் உட்பட 9 பேர் மீது பயங்கரவாதக் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

குட்டித்தீவு நாடான மாலைதீவில் அரசியல் குழப்பங்கள் நிலவி வருகின்றன. அங்கு முன்னாள் அதிபர் முகமது நஷீத் உள்ளிட்ட 9 அரசியல் தலைவர்களை விடுதலை செய்யவும், அதிபர் யாமீன் அப்துல் கயூமின் மாலைதீவு முன்னேற்றக் கட்சியின் 12 எம்.பிக்களை தகுதி நீக்கம் செய்தமை செல்லாது என்று அறிவித்து அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் உத்தரவிட்டது.

அதைத்தொடர்ந்து அங்கு நெருக்கடிநிலை அமுலானது. தீர்ப்பை வழங்கிய தலைமை நீதிபதி அப்துல்லா சயீத், நீதிபதி அலி ஹமீத் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி யாமீன் அப்துல் கயூமும் கைது செய்யப்பட்டார். பின்னர் உச்ச நீதிமன்றத்தில் எஞ்சிய நீதிபதிகள், முந்தைய உத்தரவுகளை ரத்து செய்தனர்.

இந்த நிலையில், மாலைதீவின் முன்னாள்



ஜனாதிபதி யாமீன் அப்துல் கயூம், நீதிபதிகள் அப்துல்லா சயீத், அலி ஹமீத், யாமீன் அப்துல் கயூம்மகன் உள்ளிட்ட 4 எம்.பிக்கள், முன்னாள் பொலிஸ் ஆணையாளர் உட்பட 9 பேர் மீது அங்கு உள்ள குற்றவியல் நீதிமன்றில் பயங்கரவாதக் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்கில் அவர்கள் மீதான பயங்கரவாத குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டால் குறைந்தபட்சம் 10 முதல் 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir



# விவசாயிகள் தற்கொலை: 5 ஆவது இடத்தில் தமிழகம்

ஐதராபாத்,மார்ச் 23

இந்தியாவில் விவசாயிகள் தற்கொலை செய்யும் வரிசையில் தமிழகம் 5 ஆவது இடத்தில் உள்ளது.

2016ஆம் ஆண்டு மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரப்படி தமிழகத்தில் 381 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் விவசாயிகள் வறட்சிக் காலங்களில் பெரும் நஷ்டத்துக்கு ஆளாகிறார்கள்.

அவர்களால் வங்கிக் கடனை திரும்ப செலுத்த முடியாமல் நெருக்கடிக்கு ஆளாகும் நிலையில் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

நாட்டிலேயே மராட்டிய மாநிலத்தில்தான் அதிக அளவில் விவசாயிகள் தற்கொலை செய்கிறார்கள். அதற்கு அடுத்த படியாக கர்நாடகத்திலும், மத்தியப் பிரதேசம் 3ஆவது இடத்திலும், தெலுங்கானா 4ஆவது இடத்திலும், தமிழகம் 5ஆவது இடத்திலும் உள்ளன.

(ப)



# மே மாதமே ரஜனியின் புதிய கட்சிப் பணிகள்

ரஜனிகாந்த் தமிழ் புத்தாண்டில் புதிய கட்சியை தொடங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மே மாதம் தொடங்க உள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. அதற்குள், புதிய நிர்வாகிகளை நியமிக்க ரஜனிகாந்த் முடிவு செய்துள்ளார்.

நடிகர் ரஜனிகாந்த் இமயமலைப் பயணத்தின் போது அரசியல் தொடர்பான கேள்விகளை தவிர்த்ததுடன் நான் இன்னும் முழுநேர அரசியல்வாதியாக வில்லை என்றும் கூறியிருந்தார்.



இது கடும் சர்ச்சையை ஏற்படுத்தியதுடன் சமூக வலைதளங்களிலும் அனலாய்க் கொதித்தது. இந்த நிலையில் சென்னை திரும்பியதும் போயஸ்கார்டனில் உள்ள தனது இல்லத்தில் வைத்து பேட்டி அளித்த ரஜனி, காவிரிப் பிரச்சினை, ராம ரத யாத்திரை உள்ளிட்ட கேள்விகளுக்கு பதில் அளித்தார்.தமிழ் புத்தாண்டில் புதிய கட்சியை தொடங்கப்போகிறார் எனத் தொடர்ந்து வெளியாகி வந்த தகவல்களுக்கும் அவர் முற்றுப் புள்ளி வைத்தார்.

அன்றைய தினம் புதிய கட்சியை அறிவிக்கும் திட்டம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.இதனைத் தொடர்ந்து மே மாதம் ரஜனி புதிய கட்சியை தொடங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான பணிகளை அவர் முடுக்கி விட்டுள்ளார்.

## காவிரி விவகாரம்:

# உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு 4 மாநிலங்களும் ஆதரவு

புதுடில்லி,மார்ச் 23

காவிரி விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பைச் செயற்படுத்த 4 மாநிலங்களும் ஒப்புதல் அளித்திருக்கின்றன என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் தீர்ப்பு வழங்கியது. அதில், காவிரி நடுவர் மன்றம் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள செயற் திட்டத்தை (காவிரி மேலாண்மை வாரியம்) மத்திய அரசு 6 வாரங்களுக்குள் ஏற்படுத்த வேண்டும் என்றும், அடுத்த 15 ஆண்டுகளுக்கு இதுவே இறுதி என்பதால், மாநில அரசுகள் மேல் முறையீடு செய்யக் கூடாது என்றும் உத்தரவிட்டது.

இந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டபடி காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது. இதற்காக நாடாளுமன்றத்தில் தொடர்ந்து தமிழக எம்.பி.க்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.



**மத்திய அரசு அறிவிப்பு**

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. எம்.பி. வேணுகோபால் எழுப்பிய கேள்விக்கு மத்திய அரசு எழுத்துபூர்வமாக பதில் அளித்துள்ளது.

அதில், காவிரி விவகாரத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை செயற்படுத்த 4 மாநிலங்களும் ஒப்புதல் அளித்திருக்கின்றன என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# பிரமோஸ் சுப்பர்சொனிக் வெற்றிகரமாகச் சோதனை

புதுடில்லி,மார்ச் 23

இந்தியாவின் அதிவேக பிரமோஸ் சுப்பர்சொனிக் ஏவுகணை நேற்று ராஜஸ்தானில் உள்ள பொக்ரான் பகுதியில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

இந்தியா - ரஷ்யா கூட்டுதயாரிப்பான பிரமோஸ் சுப்பர்சொனிக் ஏவுகணை சுமார் 2 ஆயிரம் கிலோ எடை கொண்டதாகும். இந்த ஏவுகணை 200 கிலோ வெடி பொருளுடன் சுமார் 290 கிலோ மீற்றர் தூரம் வரை பறந்து சென்று தாக்கும் ஆற்றல் கொண்டது. நிர்ணயிக்கப்பட்ட பாதையில் செல்லும்போது, தேவைப்பட்டால் இலக்கிலிருந்து 20 கிலோ மீற்றர் தூரத்தில் இலக்கின் போக்குக்குஏற்பதிசைமாறிச்சென்று தாக்கும் வல்லமை கொண்டது.




இதற்கு முன் பல முறை பிரமோஸ் ஏவுகணை சோதனை செய்யப்பட்டது. இந்த நிலையில், ராஜஸ் தான் மாநிலத்தில் உள்ள பொக்ரான் பகுதியில் பிரமோஸ் ஏவுகணை வெற்றி கரமாக சோதனை செய்யப்பட்டது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மிகத் துல்லியமாக தாக்கி அழித்தது.

இந்த வெற்றிக்குப் பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

# ‘ஜெ’ சிகிச்சைப் பகுதிகளில் சி.சி.ரி.வி. நிறுத்தப்பட்டது

## அப்பலோ தலைவர் பிரதாப் ரெட்டி


சென்னை,மார்ச் 23

ஜெயலலிதா சிகிச்சை பெற்ற பகுதியில் இருந்த அனைத்து சி.சி.ரி.வி கமராக்களையும் நிறுத்தி வைத்திருந்தோம் என அப்பலோ தலைவர் பிரதாப் ரெட்டி தெரிவித்துள்ளார்.

அப்பலோ ஆஸ்பத்திரி தலைவர் பிரதாப்ரெட்டி சென்னையில் நேற்று நிருபர்களிடம் கூறியவை வருமாறு:

ஜெயலலிதாவுக்கு நாங்கள் தனிக் கவனம் செலுத்தி உயர்தர சிகிச்சை அளித்தோம். அவரை யார்-யார் சந்திக்க வந்தார்கள் என்பதை அவருடன் இருந்தவர்களுக்குத் தெரியப்படுத்தினோம். அவருடன் இருந்தவர்கள் சொன்னபடி வைத்தியர்கள் அவரைச் சந்திக்க அனுமதித்தனர்.

எங்களால் முடிந்த அளவுக்கு ஜெயலலிதாவுக்கு அனைத்து விதமான உயர்தர சிகிச்சைகளை அளித்தோம். ஜெயலலிதா சிகிச்சை பெற்ற பகுதியில் இருந்த அனைத்து சி.சி.ரி.வி கமராக்களையும் நிறுத்தி வைத்திருந்தோம்.



ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை முழு விவரங்களையும் விசாரணை ஆணையத்தில் தாக்கல் செய்து உள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

(ப)

# டோர்ச் வெளிச்சத்தில் சத்திரசிகிச்சை; முயற்சி பயனின்றி பெண் உயிரிழப்பு

பாட்னா,மார்ச் 23

பீகாரில் உள்ள மருத்துவமனையில் டோர்ச் வெளிச்சத்தில் அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்ட பெண் சிகிச்சை பயனின்றி இறந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் மாநிலம் சகார்சா மாவட்டத்தில் உள்ள சதார் மருத்துவமனையில் கடந்த 18ஆம் திகதி இரவு அதே பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அறுவைச் சிகிச்சையின்போது மருத்துவமனையில் மின்சாரம் இல்லாததால், டோர்ச் வெளிச்சத்தில் அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இதுதொடர்பான வீடியோ இணைய தளங்களில் வெளியாகி வைரலாகப் பரவியது. அதில், மயக்க நிலையில் படுத்திருக்கும் பெண்ணின் கையில் அடிபட்டுள்ளது. அவருக்கு மற்றொரு பெண் டோர்ச் வெளிச்சத்தைப் பாய்ச்ச அந்த வெளிச்சத்தில் சிகிச்சை அளிப்பது போன்ற காட்சிகள் பதிவாகியுள்ளன.

இந்த நிலையில், சதார் மருத்துவமனையில் டோர்ச் வெளிச்சத்தில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட பெண் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்த நிலையில் இது தொடர்பாக பாட்னா பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

(ப)



## ஓய்வறையின் கண்ணாடி கதவை உடைத்தவர் பங்களாதேஷ் கப்டனே!

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற சுதந்திரக்கிண்ண போட்டியில் ஓய்வறையின் கண்ணாடிக் கதவை உடைத்தவர் பங்களாதேஷ் அணித்தலைவரென செய்திகள் வெளியாகியுள்ளன.

சுதந்திரக்கிண்ண கிரிக்கெட்தொடரில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இறுதி லீக் போட்டியில் இறுதி ஓவரின் போது வீசப்பட்ட பந்தால் ஏற்பட்ட நோபோல் சர்ச்சையானது பெரிதாகி வீரர்களுக்குள் மோதல் வெடித்தது. இந்தப் போட்டியின் போது பல சர்ச்சைகள் அரங்கேறின. இந்த நிலையில் பங்களாதேஷ் வீரர்கள் இருந்த ஓய்வறையின் கண்ணாடிகள் உடைந்திருந்தன. ஆனால், யார் இதை உடைத் தார்கள் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

ஆனாலும் இதை உடைத்தவர்கள் பங்களாதேஷ் வீரர்கள் தான் என்று சந்தேகம் எழுப்பப்பட்டிருந்த நிலையில், ஓய்வறைக் கண்ணாடிகளை உடைத்தவர் பங்களாதேஷ் அணித் தலைவர் ஷகிப் அல்ஹசன் தான் என தற்போது செய்திகள் கசிந்துள்ளன.

அத்தோடு உடைந்த கண்ணாடிக் கதவுகளை மீளவும் பொருத்துவதற்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் வரை செலவு ஏற்பட்டுள்ளது எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த சம்பவத்தன்று கிரிஸ் பிரோட் கண்காணிப்பு கமெரா பதிவை பார்வையிட்டுள்ளார். அத்தோடு வீரர்களுக்கு சிற்றுண்டி பரிமாறும் பணியாளர் ஒருவர் இதற்கு காரணமான வீரரின் பெயரை கிரிஸ் பிரோட்டிடம் அப்போதே தெரிவித்துள்ளார்.

ஆனாலும் ஷகிப் அல் ஹசன் உள்ளிருந்து திறக்க வேண்டிய கண்ணாடிக் கதவை வேகமாக வெளிப்புறமாக திறந்தமையால் குறித்த கண்ணாடிக் கதவு உடைந்தது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எது எப்படியோ இத் தொடரில் பங்களாதேஷ் அணி வீரர்களின் அருவருப்பான நடவடிக்கைகள் பலரது எதிர்ப்பை சம்பாதித்துள்ளன.

இந்த நிலையில் பங்களாதேஷ் வீரர்களின் நடவடிக்கைகள் குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை கவலை வெளியிட்டிருந்தது.

இருப்பினும் பங்களாதேஷ் வீரர்களான ஷகிப் அல் ஹசன் மற்றும் நூபல் ஹசனுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை போட்டித் தொகையில் 25 வீத அபராதம் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொது அணியை வைத்து எதிரணியை வீழ்த்துவோம்

## தயாசிறி ஜயசேகர சூளுரை

இலங்கை அணி தோற்றாலும் கூட நாம் பொது அணியை வைத்து எதிர் அணியை வீழ்த்துவோம் என்பதை பங்களாதேஷ் அணி மறந்துவிட்டது என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தோல்விக்கு அணியின் தலைவரே பொறுப்புக்கூற வேண்டும். எனினும் கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் வெற்றிகளைப் போலவே தோல்விகளையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினாவின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி



ரோஹினிகுமாரிவிஜேரத்னதம்புள்ளை விளையாட்டரங்கில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டிகளின் எண்ணிக்கை மற்றும் வருமானம் குறித்தும், இலங்கை அணி தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்து வருகின்றமைக்கு அமைச்சர் பதவி விலகுவாரா என்ற கேள்விகளை எழுப்பிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# சிக்கலில் பாண்டையா

அம்பேத்கார் பற்றி டுவிட்டர் பக்கத்தில் தரக்குறைவான கருத்து பதிவிட்டது தொடர்பாக இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்திக் பாண்டையா கைது செய்யப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி ஹர்திக் பாண்டையா தமது டுவிட்டர் பக்கத்தில் அம்பேத்கார் தொடர்பில் தரக்குறைவான பதிவு ஒன்றை பதிவிட்டு, எதிர்ப்பு வலுத்ததால் அதை நீக்கியுள்ளார்.

இதனையடுத்து அம்பேத்காரை தரக்குறைவாக பேசினார் எனக் கூறி அவர் மீது பொதுநல வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த






நிலையில் சிறுபான்மையினருக்கு எதிராக பேசிய குற்றத்தின் கீழ் இவர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது.

மேக்வால் என்ற வழக்கறிஞர் இந்த வழக்கைத் தொடுத்துள்ளார். ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் காவல்நிலையத்தில் இந்தக் குற்றச்சாட்டு அளிக்கப்பட்டுள்ளது.

## பிரபல கிரிக்கெட் வீரர் மரணம்

பிரபல முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் பிரேம் பாட்யா உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்துள்ளார். அவருக்கு வயது 78 ஆகும். 1960 ஆம் ஆண்டில் 56 first-class போட்டிகளில் விளையாடியுள்ளார்.



Irani Cup போட்டியில் இவரது பங்களிப்பு அதிகமாக இருந்துள்ளது. டில்லியில் வசித்து வந்த இவர் உடல்நலக்குறைவு காரணமாக கடந்த சில நாள்களுக்கு முன்பு உயிரிழந்துள்ளார்.

# மாவட்ட மென்பந்துப் போட்டி: சிவபாதகலையகம் முதலிடம்



பல்வேறு வளப் பற்றாக் குறைகளுடன் இயங்கிவரும் பாடசாலைகளில் ஒன்றான கிளிநொச்சி சிவபாதகலையகம் பாடசாலை பெண்களுக்கான மென்பந்துப் போட்டியில் கிளிநொச்சி வலயத்தில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

இருபதுவயதின்கீழ் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்டமென்பந்துபோட்டியிலேயே கிளிநொச்சி மாவட்டத்தில் பல நகர்புற முன்னணிப் பாடசாலைகளையும் வெற்றி கொண்டு முதல் இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இப் பாடசா லையின் 16 வயதின் கீழான ஆண்கள் கரப்பந்துப் போட்டியில் கிளிநொச்சி வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (81)

# ரபடா மீதான தடை நீக்கம்: ஸ்டீவன் ஸ்மித் அதிருப்தி

ரபடா மீதான தடை நீக்கத்தால் அதிருப்தி அடைந்துள்ள ஆஸ்திரேலிய கப்டன் ஸ்டீவன் ஸ்மித், களத்தில் இனி லேசாக இடிக்கலாம் என்பது போல் தீர்ப்பு அமைந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் காஜிசோ ரபடா, போர்ட்எலிசபெத்தில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் அந்த அணியின் கப்டன் ஸ்டீவன் ஸ்மித்தின் விக்கெட்டை வீழ்த்தியதும் அவரது தோள்பட்டையை இடித்தார்.

இது பற்றி விசாரணை நடத்தியது. ரபடா வேண்டுமென்றே ஸ்மித்தை இடித்தமை உறுதி செய்யப்பட்டிருக்கின்றமையால் அவருக்கு 2 டெஸ்டில் விளையாட



தடையும், போட்டிக் கட்டணத்தில் இருந்து 50 வீதம் அபராதமும் விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து ரபடா மேன்முறையீடு செய்தார். மேன்முறையீடு குறித்து 6 மணி நேரத்திற்கு மேலாக விசாரித்த விசாரணை ஆணையர் மைக்கேல் ஹெரோன், ரபடாவுக்கு விதிக்கப்பட்ட தகுதி இழப்பு புள்ளி, அபராத கட்டணம் ஆகியவற்றை குறைத்தார். இதன் மூலம் 2 டெஸ்டில் விளையாட விதிக்கப்பட்ட தடையும் நீங்கியது.

இதனால் கடும் கோபமும், அதிருப்தியும் அடைந்துள்ள ஆஸ்திரேலிய கப்டன் ஸ்டீவன் ஸ்மித் நேற்று நிருபர்களிடம் கூறியவை வருமாறு–

உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் வீடியோ பதிவில் தெரிந்ததை விட கொஞ்சம் கடுமையாகவே ரபடா என் மீது மோதினார்.

இதனால் எனக்கு பெரிய அளவில் பாதிப்பு இல்லை. ஆனால் விக்கெட் வீழ்த்தும் போராட்டத்தில் வெற்றி கண்ட பிறகு துடுப்பாட்ட வீரரின் முகத்துக்கு அருகே ஏன் ஓடி வர வேண்டும். எதற்கு இந்த அதீத கொண்டாட்டம்? அவர் வேண்டுமென்றே இடித்தமை தெளிவாகத் தெரியும்.

அதற்காக எங்களது பந்து வீச்சாளர்களிடம் விக்கெட்டை சாய்க்கும் போது, எதிரணி வீரர்களின் முகம் அருகே ஆக்ரோஷமாகக் கத்து, மோது என்று நிச்சயமாகச் சொல்ல மாட்டேன். இது விளையாட்டுக்கு அழகல்ல.– என்றார்.

(ப)

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோவின் தலைவரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், அக்கட்சியின் செயலாளர் நாயகம் சிரேஸ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனா கருணாகரன், தலைமைக்குழு உறுப்பினர் சுரேந்திரன் ஆகியோரே இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் சுமார் 45 நிமிட நேரம் இந்தச் சந்திப்பு நீடித்ததாகத் தெரிகின்றது.

தொங்கு நிலைமை ஏற்பட்டுள்ள பிரதேச சபைகளில் ஸ்திரமான நிர்வாகத்தை ஏற்படுத்தி, மக்களுக்கு நியாயமான சேவை ஒன்றை வழங்க வேண்டிய கட்டாயம் இருப்பதால், அதற்கான வழி வகைகள் குறித்து ஆராய்வதற்காகவே இந்தப் பேச்சு இடம் பெற்றதாக ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன.

"ரெலோ உறுப்பினர்கள்தானே ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகத்தைச் சந்தித்திருக்கின்றீர்கள்? அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்பாகக் கருதலாமா? அப்படிக் கருதுகின்றமையைக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொள்ளுமா?" – என்று சந்திப்பில் கலந்துகொண்ட ரெலோ செயலாளர் நாயகம் ஸ்ரீகாந்தாவிடம் கேட்டோம்.

"ஏன் அவர்கள் மட்டுமா கூட்டமைப்பு சார்பில் பேச முடியும்?" – என்று சீற்றத்துடன் பதில் கேள்வி எழுப்பிய அவர், "கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி என்ற கோதாவிலும், கூட்டமைப்பினர் என்ற உரிமையுடனுமே பேச்சுக்குச் சென்றோம். எமது மக்களுக்கு – எமக்கு வாக்களித்த மக்களுக்கு – நியாயமான நிர்வாகத்தை வழங்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு உள்ளது. அதனை நடுவீதியில் விட்டுவிட்டு நாம் சும்மா இருக்கமுடியாது. அரசியல் பொறுப்புணர்வுடன் தான் இந்த நடவடிக்கையை – முயற்சியை – ஆரம்பித்திருக்கின்றோம். ஸ்திரமான நிர்வாகம் ஒன்றுக்கு ஒத்துழைக்கும்படி கோருவதில் தப்பேதும் இல்லை" – என்றும் பதிலளித்தார்.

**சம்பந்தனுக்கும் தெரியும்**

"செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான குழு ஒன்று உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகத்தை அமைக்கின்றமை தொடர்பில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்தியுள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா?" – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனிடம் நேற்றிரவு கேட்டோம்.

"ஆம்." எனக்கு அது தெரியும்" – என்று பதிலளித்தார் அவர்.

"கிழக்கில தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து நிர்வாகங்களை ஸ்திரமாக்கி நடத்துவதற்கு சில தமிழ்க் கட்சிகள் முன் வந்துள்ளன. அது தொடர்பான பூர்வாங்கப் பேச்சுக்களில் கணிசமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வடக்கைப் பொறுத்தவரை தீர்க்கமான முடிவுகள் இன்னும் எட்டப்படவில்லை. விரைவில் எட்டப்படும் என எதிர்பார்க்கிறோம்." – என்றார் சம்பந்தன். (உ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காகக் கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கல்லூரி வளாகத்தில் காணாமற்போனோரின் உறவினர்கள் சந்தித்தனர்.

தொழில்நுட்ப ஆய்வு கூடத்தைத் திறந்துவைக்கும் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, காணாமற்போனோர் அலுவலகத்தின் ஊடாக முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அவர்களுக்கு நியாயமான தீர்வுகள் வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்வு முடிவடைந்ததன் பின்னர் தம்மைச் சந்திப்பதற்காக முன்னறிவித்தலின்றிச் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வளாகத்துக்குள் வருகை தந்திருந்த, அருட்தந்தை எம். சக்திவேல் உள்ளிட்ட காணாமற்போனோரின் உறவினர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்ததோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சட்டதிட்டங்களுக்கமைய காணாமற்போனோர் அலுவலகத்தினூடாக நியாயமான தீர்வுகள் அவர்களுக்கு வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், அன்றைய தினம் ஜனாதிபதியைச் சந்திப்பதற்குத் தமக்கு நேரம் ஒதுக்கித்தருமாறு காணாமற்போனோரின் உறவினர்களால் ஏற்கனவே வேண்டுகோள் எதுவும் விடுக்கப்பட்டிராத நிலையிலேயே இந்தச் சந்திப்புக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

ஆயினும் ஜனாதிபதி, காணாமற்போனோரின் உறவினர்களைச் சந்திப்பதற்காக நேரத்தை ஒதுக்கிவிட்டு, அவர்களைச் சந்திக்காமலே சென்றுவிட்டார் என்று ஊடகங்களில் வெளியான செய்திகளில் எந்த வித உண்மையும் இல்லை என்பதோடு, தமிழ் மக்களைத் தவறாக வழிநடத்துவதற்காகவும், ஜனாதிபதி மீது அவதூறு பரப்புவதற்காகவும் இந்தச் செய்தி திட்டமிட்ட முறையில் விசமிகள் சிலரால் பரப்பப்பட்டு வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் . – என்றுள்ளது.

இதேவேளை, அன்றைய தினம் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக தான் உட்பட மூவர் கல்லூரி வளாகத்துக்கு உள்ளே அழைக்கப்பட்டதாகவும் ஆயினும் ஜனாதிபதி, தம்முடன் எதுவும் பேசாமல் தாம் வைத்திருந்த பதாகையை வாங்கிப் பார்த்துவிட்டு அப்படியே சென்றுவிட்டார் என்றும் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார். (ஐ)

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட இராணுவ முகாம்களில் இருந்து வரவழைக்கப்பட்ட படையினர் மீண்டும் அவர்களின் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

11ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த படையணியினர் மாத்திரம் கண்டி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்தப் படையினர் பொலிஸாருடன் இணைந்து ரோந்துப் பணிகளிலும் வீதித் தடைகளை ஏற்படுத்தியும் தேடுதல்களை நடத்தி வருவதாக இராணுவம் கூறியுள்ளது. (ஐ)

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையில்லாப் பிரேரணையும், புதுக்குடியிருப்பில் பிரசாரக் கூட்டத்துக்கு வந்த மக்கள் உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டமையுமே காரணம்."

– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு வடக்கு மாகாண சபையின் செயற்பாடும் காரணமெனத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்த கருத்து அர்த்தமற்றது என்றும் சிவாஜிலிங்கம் கூறினார்.

பின்னடைவுகளுக்கான காரணங்களைக் கண்டு அதனை நிவர்த்தி செய்யாமல், ஆளையாள் பார்த்து கை விரலை நீட்டினால் மற்றைய நான்கு விரல்களும் எங்களையே நோக்கு மென்பதையும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு மாகாண சபையினால் கூட்டமைப்புக்குப் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக மாவை சேனாதிராசா தெரிவித்த கருத்து தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசுக்கு ஆதரவு வழங்கியமையாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பின்னடைவை சந்தித்துள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார். இந்த நிலையில் வடக்கு மாகாண சபையின் செயற்பாடே கூட்டமைப்பின் பின்னடைவுக்குக் காரணம் என மாவை சேனாதிராசா கூறுவது அர்த்தமற்ற குற்றச்சாட்டாகும்.

இந்தக் கருத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறவில்லை. ஆகவே மாவை சேனாதிராசாவின் கருத்து அர்த்தமற்ற ஒரு கருத்தாக அமைந்துள்ளது.

வடமாகாண சபையின் செயற்பாட்டினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னடைவைச் சந்திக்கவில்லை. மாறாக வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு முயற்சித்திருந்தமையாலேயே கூட்டமைப்பு பின்னடைவைச் சந்தித்துள்ளது.

அதனைவிடப் புதுக்குடியிருப்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றுக்கு வந்த மக்கள் உடற்பரிசோதனை செய்யப்பட்டதால் ஆகக் குறைந்தது 25ஆயிரம் 50 ஆயிரம் வாக்குகள் குறைந்திருக்கலாம்.

இவை எல்லாம் தேர்தலிலே வருகின்ற பாதிப்புகள், நிலைமைகள் என்பதைப் புரியாமல் ஆளையாளைப் பார்த்து விரலைக் காட்டினால் மற்ற விரல் நான்கும் எங்களையே நோக்கும். அதனை புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை அரசைத் தொடர்ந்து ஆதரித்ததும் அதற்கு வக்காலத்து வாங்கியதும்தான் மோசமான தோல்வியைக் கொடுத்திருக்கின்றது. எல்லாவற்றுக்கும் சேர்த்து மக்கள் ஒரு பதிலைச் சொல்லியிருக்கின்றனர். அதிலிருந்து நாங்கள் சரியாகச் செயற்பட வேண்டும். – என்றார். (ஐ-7)

## ராணுவச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துச் சென்ற குற்றத்துக்காக இராணுவக் கோப்ரல் உள்ளிட்ட மூவருக்குத் தூக்குத்தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று நேற்றுத் தீர்ப்பளித்தது.

தானியங்கித் துப்பாக்கியைப் பயன்படுத்தியமைக்கு எதிரிகள் மூவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்படுகின்றது. குருக்கள் மற்றும் அவரது பிள்ளைகளைச் சுட்டுப் படுகாயப்படுத்தியமைக்கு மூன்று எதிரிகளுக்கும் தலா 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகின்றது என்றும் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார்.

2010 ஆண்டு டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி சங்கானை, முருகமூர்த்தி வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவற்றைக் கொள்ளையிட்டனர். துப்பாக்கிச் சூட்டில் சிவானந்தக் குருக்கள் நித்தியானந்தக் குருக்கள் கொல்லப்பட்டார். அவரது மகன்கள் இருவரும் படுகாயமடைந்தனர்.

இந்த வழக்கில் இராணுவப் புலனாய்வாளர்கள் என்று தெரிவிக்கப்பட்ட காசிநாதன் முகுந்தன் அல்லது சக்தி, பாலசுப்பிரமணியம் சிவரூபன் (விடுதலைப் புலிகள் அமைப்பில் போராளிகளாக இருந்து விலகி இராணுவத்தில் சரணடைந்ததாக மன்றிடம் தெரிவித்தனர்) ஆகியோரும் இராணுவக் கோப்ரல் பேதுறு குணசேனவும் எதிரிகளாகக் கைது செய்யப்பட்டனர்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்று வழக்கேடுகள் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டன. சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தமை, துப்பாக்கியைப் பயன்படுத்தியமை, குருக்களைக் கொலை செய்தமை மற்றும் மூவரைப் படுகாயப்படுத்தியமை ஆகிய 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்து எதிரிகள் மூவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்றன. இதன்போது சந்தேக நபர்கள் மூவரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர். இவர்களுக்கான தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் வழங்கிய தீர்ப்பின் சாராம்சம் வருமாறு:-

இந்துமத குருக்களின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தமைக்கு மூன்று எதிரிகளுக்கும் 2 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகின்றது. அத்துடன் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தவேண்டும். தவறின் ஒரு மாதச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

தானியங்கிச் சுடுகலனை (ரி56 துப்பாக்கி) குற்றச்செயலுக்கு பயன்படுத்தியமைக்கு இலங்கைத் தண்டனைச் சட்டக்கோவையின் பிரகாரம் தூக்குத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்க முடியும். அதனடிப்படையில் எதிரிகள் மூவருக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்படுகிறது. அத்துடன் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்படுகிறது. தவறின் 2 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

குருக்களைத் துப்பாக்கியால் சுட்டுப் படுகாயப்படுத்தியமைக்கு எதிரிகள் மூவருக்கும் தலா 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அத்துடன் குருக்களின் குடும்பத்துக்கு எதிரிகள் மூவரும் தலா ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும். தவறின் ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும். இந்தக் குற்றத்துக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தவேண்டும். செலுத்தத் தவறின் தலா 2 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்கநேரிடும்.

குருக்களின மகனைப் படுகாயப்படுத்தியமைக்கு எதிரிகள் காயப்படுத்தியமைக்கு எதிரிகள் மூவருக்கும் தலா 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அத்துடன் அவருக்கு எதிரிகள் மூவரும் தலா ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும். தவறின் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். இந்தக் குற்றத்துக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தவேண்டும். செலுத்தத் தவறின் தலா 2 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

இந்துமத குருக்களைக் கொலை செய்த குற்றத்துக்கு மூன்று எதிரிகளுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது.

இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும் தினத்தில் – இடத்தில் எதிரிகள் மூவரின் உடலிருந்து உயிர் பிரியும்வரை தூக்கிலிடப்படுவார் என்று தீர்ப்பளித்து நீதிபதி தனது பேனாவை உடைத்தெறிந்தார். அத்துடன் மன்று கலைந்தது.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி நாகரட்னம் நிஷாந்த் தொகுப்புரை வழக்கை நெறிப்படுத்தினார். முதலிரண்டு எதிரிகள் சார்பில் சர்மினி விக்னேஸ்வரனும் மூன்றாவது எதிரியான இராணுவச் சிப்பாய் சார்பில் மன்றினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி ஜோய் மகிழ் மகாதேவாவும் முன்னிலையாகி தமது தொகுப்புரைகளை முன்வைத்தனர். (ஐ-7)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவது எனக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை 55 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சபாநாயகரிடம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு கையளிக்கப்பட்டது.

மஹிந்த ஆதரவு கூட்டு எதிரணியின் 51 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 4 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர். எனினும், முன்னாள் ஜனாதிபதி இந்தப் பிரேரணையில் கையொப்பமிடவில்லை. (ஐ)

# அரசிலிருந்தவாறு அரசுக்கு எதிராகக் கருத்துக் கூறுவோர் எதிர்க்கட்சியில் அமருவதே சிறந்தது என்கிறார் ராஜித

கொழும்பு, மார்ச் 23

ஜனாதிபதி மற்றும் பிரதமருக் கிடையில் எந்தவித பிரச்சினை யும் இல்லை. பிரச்சினையை உண்டு பண்ண சிலர் முயற்சிக் கின்றனர். இம் முயற்சி ராஜபக்ஷ குடும்பத்தாரின் விருப்பத்திற்கு இம்பெறுகிறதாஎன்றுஎண்ணத் தோன்றுகிறது என சுகாதாரம் போசனைகள் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.



ஊடகவியலாளர்களுடன் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட் டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் ஜனாதிபதி மற்றும் பிரத மரை பாதுகாக்கும் நோக்கோடு செயற்படுகின்றேன். அரசை பாதுகாக்க வேண்டிய கடமை எம் மீதுள்ளது.

பிரதமருக்கு எதிராக நம் பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர வேண்டிய தேவை ராஜபக்ஷ குடும்பம் மற்றும் கூட்டு எதிரணியினருக்கே தேவையாக உள்ளது. தமக்கு எதிராகவுள்ள வழக்குகளை மறைக்க அவர் கள் பலவிதமாகச் சிந்திக்கின்ற னர்.

இதனை அறியாத எமது அரசுக்குள் இருக்கும் சில அமைச் சர்களும் உறுப்பினர்களும் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

தற்போது எமக்குள்ள வேலை தலைவரை மாற்றுவதல்ல, நாட்டை அபிவிருத்தி செய்து 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை வெற்றிகொள்ள முயற்சிக்க வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் இணைந்து தேர்தலில் களமிறங்கினால் வெற்றி கொள் ளலாம்.

எனவே, இரு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். இந்த இணைப்பை இல்லாமல் செய்வ தற்கே கூட்டு எதிரணியினர் முயற் சிக்கின்றனர்.

சில அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்தே அரசை விமர்சிக் கின்றனர். அதேபோல் நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்குகின்ற போது எதிராக மேடைகளில் பேசி யோரும் உள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட் பாளராக களமிறங்கிய பொழுது அவரை மானபங்கப்படுத்திய வர்களும் இருக்கின்றனர். அனைத்து சவால்களையும் தாண்டி நாம் மக்கள் பலத்தோடு தேர்தலை வெற்றி கொண்டோம்.

எனவே, இப்படிப்பட்டவர்கள் அரசை விமர்சிப்பதானது, 'கண்ணாடி வீட்டினுள் இருந்து கல் எறிவது' போன்றது. இதனை விடவும் எதிர்கட்சியில் அமர்ந்து கொள்வது யாவருக்குமே நல்லது என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

(கு)



# கொழும்பில் நிர்மாணிக்கப்படும் பிரமாண்ட ஹோட்டல் தொகுதி

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் நான்கு ஏக் கர் நிலப்பரப்பில் பிரமாண் டமான ஹோட்டல் தொகுதி ஒன்று அமைக்கப்படவுள் ளது என அறிவிக்கப்பட்டுள் ளது.

The One Sri Lanka என்ற பெரிய ஹோட்டல் தொகுதி மற்றும் The Ritz & Carlton Residences என்ற வீட்டுத் தொகுதி ஒன்றும் நிர்மாணிக் கப்படவுள்ளது எனத் தெரி விக்கப்படுகின்றது.

இது தொடர்பான தெளி வூட்டும் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நேற்று முன் தினம் கொழும்பில் இடம் பெற்றது.

கொழும்பை மையமாக வைத்து இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள் ளது. இதற்காக செலவிடப் படும் தொகை 50 கோடி டொலர்களாகும்.

இந்தத் திட்டத்தின் மூலம் இலங்கையிலுள்ள 3000 இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கவுள் ளன.

இதன் ஊடாக இலங் கையின் பொருளாதாரத்தில் பெரும் வளர்ச்சியைப் பெற முடியும் எனத் திட்டத்தின் பங்குத்தாரர் எலெக்ஸ் லுவெல் தெரிவித் துள்ளார்.

நவீன ஹோட்டலில் 473 அறைகள் மற்றும் வீட்டுத் தொகுதியில் 638 வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

செயற்றிட்டத்தின் முதற் கட்டப் பணிகள் கடந்த செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டில் அனைத்து நிர்மாணப் பணிகளும் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வறட்சியால் எட்டு மாவட்டங்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளன

இலங்கையில் நிலவும் வறட்சி காரணமாக நாட்டின் எட்டு மாவட்டங்கள் தொடர்ந் தும் பாதிக் கப்பட்டுள்ளன.

இதற்கமைய, ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 492 குடும் பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 33 ஆயிரத்து 908 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இலங்கையில் தொடர்ந்தும் நிலவும் வறட்சியு டனான காலநிலை காரணமாக பொது மக்களின் விவசாயம் உள்ளிட்ட நடவடிக்கைகள் பாதிக்கப் பட்டுள்ளன.

இதேவேளை, அதிக வெப்பம் காரணமாக காய்ச்சல், உள்ளிட்ட உடல் பாதிப்புகளும் அதி கம் ஏற்படுகின்றன.

இந்த நிலையில், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளவை வருமாறு:-

வறட்சியால் புத்தளம் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையானமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், தற்போது, முல்லைத்தீவு மற் றும் வவுனியா மாவட்டங்களிலும் வறட்சியின் தாக்கம் காணப்படுகின்றது.

இதற்கமைய புத்தளம் மாவட்டத்தில் 66 ஆயிரத்து 648 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 16 ஆயிரத்து 670 பேரும், குருணாகலை மாவட்டத்தில் 34 ஆயிரத்து 343 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 65 பேரும், பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மன்னார் மாவட்டத்தில் 24 ஆயிரத்து 076 குடும்பங்களைச் சேர்ந்த 82 ஆயிரத்து 468 பேரும், அநுராதபுரம் மாவட் டத்தில் 3 ஆயிரத்து 622 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 977 பேரும், பாதிக்கப்பட் டுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 179 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 05 பேரும், வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 159 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 557 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கண்டி மாவட்டத்தில் 215 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 856 பேரும், பொலன்னறுவ மாவட்டத்தில் 250 குடும் பங்களைச் சேர்ந்த 990 பேரும் பாதிக்கப்பட் டுள்ளனர்.

இதேவேளை, இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என வளி மண்டலவியல் திணைக்களம் நேற்று வெளி யிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எனினும், மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் எதிர் பார்க்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து காலி ஊடாக அம்பாந் தோட்டை வரையான கடற் பிராந்தியங்களுக்கு அப்பாற்பட்ட கடற் பரப்புகளில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தி யம் காணப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து காலி ஊடாக அம்பாந் தோட்டை வரையான கரையோரத்திற்கு அப் பாற்பட்ட கடற்பிராந்தியங்களில் காற்றானது மேற்கு முதல் வடமேற்கு வரையான திசைகளில் இருந்து மணித்தியாலத்துக்கு 30 கிலோ மீற் றர் முதல் 40 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக கடல் மிகவும் கொந்தளிப்பாக காணப்படுவதுடன் காற்றின் வேகமானது சடுதி யாக அதிகரித்து வீசும்.

காலநிலையில் மாற்றங்கள் நிகழும் போது பொதுமக்களை அவதானமாக செயற்படு மாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

# ரஷ்யாவிலிருந்து அமெரிக்கா செல்ல நாமலுக்கு அனுமதி மறுப்பு

ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் இருந்து எமிரேட்ஸ் வானூர்தி மூலம் அமெரிக்கா வின் ஹுஸ்டன் நகரை நோக்கிப் பயணிக்க முற்பட்ட நாமல் ராஜபக்ஷவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தன்னிடம் செல்லுபடியான நுழை விசைவு இருந்தும் அமெரிக்கா செல் வதற்கான அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பில், ரஷ்யாவில் உள்ள அமெரிக்க தூதரகம் விளக்கமளிக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் நாமல் தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் பதிவிட் டுள்ளார். அமெரிக்க அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கமைய எமிரேட்ஸ் வானூர்தி சேவையூடாக, அமெரிக்கா செல்வதற்கான அனுமதியை மறுப்பதாக எமிரேட்ஸ் விமானச் சேவை நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சரியான விளக்கம் எதுவும் வழங் கப்படாமல் தான் அமெரிக்கா செல்வது தடுக்கப்பட்டுள்ளது என்று நாமல் டுவிட் டரில் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.



# மாகாண சபை உறுப்பினர் சம்பளத்தில் உதவித் திட்டம் வழங்கும் ஜெயசேகரம்



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.ஜெயசேகரம் தனது மாதாந்தச் சம்பளத்தைப் போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்களுக்காக வழங்கியுள்ளார்.

யாழ். வணிகர் கழகத்தில் கழகத் தலைவர் ஆர். ஜனக்குமார் தலைமையில் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றபோது சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவித் திட்டங்களை ஜெயசேகரம் வழங்கினார்.

யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்துறை, வேலணை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் சுமார் 23 பேருக்கு இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள், பயனாளிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மாகாண சபை உறுப்பினராக ஜெயசேகரம் பதவியேற்ற காலம் முதல் தனது மாதாந்த வருமானத்தைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகளாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

# நீதித்துறை திருத்தச் சட்டவரைவு தொடர்பான உயர் நீதிமன்றின் விளக்கம் நாடாளுமன்றுக்கு

கொழும்பு, மார்ச்

நிரந்தர நீதாய மேல் நீதிமன்றை 'ட்ரயல் அட் பார்' அமைப்பதற்கான சட்டவரைவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான வியாக்கியனத்தை நாடாளுமன்றுக்கு அனுப்பிவைப்பதாக உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

நிதி மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல்கள் பற்றி விசாரணை நடத்துவதற்காக நிந்தர நீதாய மேல் நீதிமன்றங்களை 'ட்ரயல் அட் பார்' அமைப்பதற்காக அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நீதித்துறை சிறப்பு ஏற்பாடுகளின் திருத்தச் சட்டவரைவுக்கு எதிராக மஹிந்த ஆதரவு எதிரணி உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தது.

இந்தத் திருத்தச் சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ள அந்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், நீதியரசர்கள் புவனேக அலுவிஹார, நளின் பெரேரா ஆகிய மூன்று நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதித்துறை திருத்த சட்டவரைவைச் சவாலுக்குள்ளாக்கி உயர் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தனர்.

அவர்களின் சமர்ப்பணத்தை ஆராய்ந்த நீதியரசர் குழாம், மனு மீதான உயர் நீதிமன்றின் வியாக்கியானம் நாடாளுமன்றுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்தது.

பெரும் ஊழல் மோசடிகள் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்றங்களை 'ட்ரயல் அட் பார்' அமைப்பதற்கு நீதித்துறை சிறப்பு ஏற்பாடுகள் திருத்த சட்டவரைவு கடந்த 6ஆம் திகதி நீதியமைச்சர் தலதா அத்துக்கோரளவினால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அது தொடர்பான வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. (ஐ)


## கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று ஆரம்பமானது!

கலைவாணி விளையாட்டு மைதானம், நாவாந்துறை

இன்று 23.03.2018

யங்கென்றிஸ் (இளவாலை) VS றோயல் (ஊரெழு)

40 வயதுக்கு மேற்பட்டோருக்கான "சீசைற்" உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள்

இன்று 23.03.2018

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் VS பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டக் கழகம்

இறுதிப் போட்டிகள் 25.03.2018 (ஞாயிறு) 3.00 மணிக்கு நடைபெறும்.

அனுசரணை:- TEM THAYA EVENT MANAGEMENT, THAYA EVENT MANAGEMENT, BEES SPORTS



## பணியாளர் தேவை

### முதியோர் பராமரிப்பாளர்

சுழிபுரம் தொல்புரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் முதியோர்களைப் பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
(உணவு, தங்குமிடம் வழங்கப்படும்)

### தோட்டப் பராமரிப்பாளர் தேவை

சுழிபுரம் நெல்லியானில் அமைந்துள்ள சிவபூமி விவசாயப் பண்ணைக்கு பண்ணைப் பராமரிப்பாளர்கள் தேவை.
பண்ணையில் தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

தொலைபேசி:- 021 222 7938, 021 321 4230

தபால் முகவரி:-

தலைமைக்காரியாலயம், சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.



## CARNIVAL - 2018

2nd Jaffna's biggest CHILDREN FUN FESTIVAL

### சிறுவர்களுக்கான சித்திரைக் கொண்டாட்டம்.

காலம்- 8-12 April 2018 3pm - 10pm

இடம் - யாழ் மாநகரசபை மைதானம், யாழ்ப்பாணம்.

யாழ். நகரில் இரண்டாவது வருடமும் மிகவும் கோலாகலமாக
நடத்தப்படும் சிறுவர்களுக்கான சித்திரைக் கொண்டாட்டம்
விளையாட்டுக்கள், நடனம், மாஜாயால வித்தை, பாரம்பரிய
ஆடை அணிவகுப்பு, உணவுத் தொகுதிகள் மற்றும்
விசேட விலைகளில் ஆடைகள், இலத்திரனிய பொருட்கள்
இன்னும் பல....

MAGIC SHOW

CJ PROMOTERS

Organized By: CJ PROMOTERS Total Event Management Solution
Main Sponsor: Atlas
Co-Sponsor: கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS, Y NOT DJ Entertainment
Media Partner: DDTV, வசந்தம் FM

நீங்களும் உங்கள் பிள்ளைகளும் கொண்டாடி மகிழ மாபெரும் சந்தர்ப்பம். அனைவரும் அன்புடன் அழைக்கின்றோம்.
தொடர்புகளுக்கு-0772546511


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.